வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=


ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 28.06.2023 புதன்கிழமை | இதழ் : 201 | பக்கங்கள் : 16




# அரசியல் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தமிழ் கட்சிகள் ஓரணியாக வரவேண்டும்



## ஜனாதிபதி ரணில் அழைப்பு

● விமர்சனங்களால் கால தாமதமே

கொழும்பு, ஜூன் 28

**அரசியல் பிரச்னைக்கு தீர்வு காணவும் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கவும் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும். முக்கியமாக, தமிழ்க் கட்சிகள் தனித்தனியாக பிரிந்து நிற்காமல் எம்முடன் ஒன்றிணைந்து பயணிக்க முன்வர வேண்டும். - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அரசியல் தீர்வு குறித்தோ நாட்டின் அபிவிருத்தி குறித்தோ கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்க வேண்டாம். அவை காலத்தைத் தாமதிக்குமே தவிர வேறு பயனில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் கம்பஹா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்றிருந்தார். இதன் பின்னர், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “வெளிநாட்டு (பிரிட்டன், பிரான்ஸ்) பயணத்தின் போது சர்வதேச தலைவர்கள், புலம்பெயர் மக்களையும் சந்தித்து கலந்துரையாடினேன். இதன்போது, தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காணுதல், அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தல், எதிர்கால இலங்கையை வடிவமைத்தல் போன்ற விடயங்கள் குறித்து எனது நிலைப் பாட்டை

15

## யாழ். - கொழும்பு ரயில் சேவையை ஜூலை 15இல் ஆரம்பிக்கத் திட்டம்

கொழும்பு, ஜூன் 28

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவையை ஜூலை 15ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை ஜனவரி 5ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஓமந்தை - அநுராதபுரம் வரையான புகையிரதப் பாதை திருத்த வேலை காரணமாகவே ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டது.

இந்தியாவின் நிதி உதவியில் மேற்கொள்ளப்படும் இந்தத் திருத்த வேலை நிறைவுற்ற பின்னர், அநுராத புரத்தில் இருந்து காங்கேசன்துறை வரை மணிக்கு 100 கி. மீ. வேகத்தில்

15

## ஆளும் கட்சியின் கூட்டம் இன்று!

கொழும்பு, ஜூன் 28

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் மாலை 5 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டு

15

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் மக்களின் வைப்புகள் பாதிக்கப்படாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட மக்களின் பணத்தைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள நிதியங்களின் அங்கத்துவ இருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் செலுத்தப்பட்டுள்ள அதிக ஓய்வூதிய நிதி கொடுப்பனவு வீதங்களுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படாது. அத்துடன், இலங்கையின் வங்கி கட்டமைப்பின் உறுதித் தன்மைக்கோ எந்தவோர் அரச அல்லது தனியார் வங்கியின் உறுதிப்பாட்டுக்கோ பாதிப்பு ஏற்படாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிர்வாகக்

15

## ஈழத்தமிழ் அரசியல் ஐ.நா.மீது செல்வாக்கு செலுத்தவில்லை

### மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, ஜூன் 28

யுனெஸ்கோ மகாவம்சம் நூலை உலக பாரம்பரிய ஆவணங்களில் ஒன்றாக ஏற்றுள்ளது. இது பெருந்தேசிய வாதிகளை பலப்படுத்தப் போகிறது என்று கூறியுள்ள மனோ கணேசன் எம். பி., ஈழத் தமிழ் அரசியல் இவை தொடர்பில் ஐ. நா. நிறுவனங்களின்மீது செல்வாக்கு செலுத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்

15

## மகாபொல புலமைப்பரிசில் நிதி இந்த வாரத்துக்குள் மாணவருக்கு

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வாரத்துக்குள் மாணவர்களின் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் நிதி தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

15

## எனக்கு தமிழ் தெரியும் தமிழில் பேசுங்கள்!

### பிரான்ஸில் கூறிய ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 28

பிரான்ஸில் உள்ள தமிழ் செயல்பாட்டாளர் ஒருவர் ஆங்கிலத்தில் கேள்வி ஒன்றை கேட்பதற்கு தடுமாறினார். அப்போது அவரை மறித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனக்கு தமிழ் தெரியும் என்றும் தமிழிலேயே கேட்கலாம்

15

## சனி, ஞாயிறு தினங்களில் கூடுகின்றது பாராளுமன்று

### வெளியானது விசேட வர்த்தமானி

கொழும்பு, ஜூன் 28

எதிர்வரும் சனிக்கிழமை பாராளுமன்றத்தின் விசேட அமர்வை கூட்டுவதற்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவால் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்க பாராமன்றத்தின் நிலையியல் கட்டளைகளின் 16ஆம்

15

## உலக வங்கியிடமிருந்து இலங்கை 50 கோடி டொலர் கடன் பெறுகிறது

கொழும்பு, ஜூன் 28

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக 50 கோடி டொலர் - இன்றைய மதிப்பில் சுமார் 14 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கடனுதவியை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணங்கியுள்ளது. இந்தக் கடனை இரு கட்டங்களாக பெற உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் உடன்படிக்கை செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு வரை 2 ஆண்டுகளுக்கான அபிவிருத்தி வேலைத் திட்ட கொள்கையின் கீழ் உலக வங்கியின் ஒத்துழைப்பை பெறுவதற்கான பேச்சு கடந்த மே 17ஆம் திகதி நடைபெற்றது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ்

15

## “வெளியானது அஸ்வெசும இறுதி பட்டியல் அல்ல”



கொழும்பு, ஜூன் 28

பல்வேறு அரசியல் குழுக்களின் அழுத்தங்களில் சிக்காமல் பயனாளிகள் பட்டியலில் பெயர்கள் இடம்பெறாத அனைத்து விண்ணப்பதாரர்களும் ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறும் மேன்முறையீட்டு காலம் முடிவடைந்த பின்னர் தகுதியானவர்களின் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

‘அஸ்வெசும’ சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ஊடக

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை




யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் 18ஆம் திருவிழாவான நேற்றுமுன்தினம் மஞ்சத் திருவிழா பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## யாசகர்களுக்கு புனர்வாழ்வு

கொழும்பு, ஜுன் 28

காலி முகத்திடலில் உள்ள யாசகர்களால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது, காலி முகத்திடல் பகுதியில் சுமார் 150 பேர் கொண்ட யாசகம் கேட்பவர்கள் குழு அங்குள்ளது. இந்த யாசகர்களை புனர்வாழ்வு நிலையத்தில் சேர்த்து அவர்களுக்கு தேவையான தங்குமிடங்களையும் உணவையும் வழங்க இலங்கை துறைமுக அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# பொருளாதார சவாலை எதிர்கொள்ள இலங்கைக்கு சீனா ஆதரவளிக்கும்

## பிரதமருக்கு சீனத் தூதுவர் உறுதி

கொழும்பு, ஜுன் 28

கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கை முன்னெடுத்துள்ள முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் என்று சீனா உறுதியளித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் சந்தித்துப் பேசினார். இதன்போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

பொருளாதார பிரச்னைகளுக்கு நீண்டகால தீர்வுகளாக சீனாவிலிருந்து நேரடி முதலீடுகள் எதிர்பார்க்கப்படுவதாக சீனத்தூதுவரிடம் தெரிவித்த பிரதமர் விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் நீர் வழங்கல் துறைகளிலும் முதலீடுகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முதலீட்டுத் திட்டங்கள், சீனாவுடனான வர்த்தக விரிவாக்கம், கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கல்வி, விவசாயம், கலாசாரப் பரிமாற்றங்கள், உயர் மட்ட உறவுகள், பின்தங்கிய வர்களுக்கான உதவிகள் உள்ளிட்ட பல முக்கிய காரணிகள் தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

சீனாவின் யுனான் மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் அதிக அருவடை தரக்கூடிய அரிசி வகைகளை அறிமுகப்படுத்தி இலங்கையில், அரிசி உற்பத்தியை அதிகரிக்க கிராமப்புற மக்களுக்கு ஆதரவளிக்குமாறு பிரதமர் சீனத் தூதுவரிடம் விசேட கோரிக்கை ஒன்றை இதன் போது முன் வைத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு முன்னெடுத்துள்ள முயற்சிகள் மகிழ்ச்சியளிப்பதாகவும், கடனை மறுசீரமைப்பதற்கும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் இலங்கையின் தற்போதைய முயற்சிகளை எதிர்கொள்ள சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை உறுதிப்படுத்துவதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

பதுளை, புத்தளம் போன்ற தொலைதூர பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று கல்வித் தேவைகளை வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தேசிய ரென்னிஸ் போட்டி: யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் வெற்றி பெற்றனர்



யாழ்ப்பாணம், ஜுன் 28

தேசிய ரீதியிலான ரென்னிஸ் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இலங்கை ரென்னிஸ் சம்மேளனத்தின் எஸ். ரி. ஆர். குழுமம் தேசிய ரீதியிலான ரென்னிஸ் போட்டியை கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடத்தியது.

இதில், 8 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியின் இரட்டையர் பிரிவில் விக்னேஸ்வரன் அஸ்விதா முதலாம் இடத்தைப் பெற்றார். இதேபோன்று ஒற்றையர் பிரிவில் மொஹமட் அம்ராம் நிஷா இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

7 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியின் இரட்டையர் பிரிவில் ஜங்கரன் திரிஷானன், சிறீநிமல் அபிமன் இரண்டாம் இடங்களை பெற்றனர்.

கடந்த வருடமும் தேசிய ரீதியிலான பாடசாலைகளுக்கு இடையிலான ரென்னிஸ் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவர்கள் முதல் இடங்களை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மடு அன்னையின் திருவிழா; விசேட கலந்துரையாடல்



மன்னார், ஜுன் 28

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் தேவாலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் உட்பட அழைக்கப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

குடி தண்ணீர், போக்குவரத்து, சுகாதாரம், மருத்துவ உதவிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது.

தொடர்ந்து நவநாள் திருப்பலி தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் ஜுலை 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக் கொடுக்க உள்ளனர்.

இந்த முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் மடு அன்னையின் ஆசீர் பெற வருகை தர உள்ளமையினால் சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்தார். (ஐ)

# ஒட்டுசுட்டான் ஓட்டு தொழில்சாலையை மீள இயக்குவது தொடர்பில் ஆராய்வு



முல்லைத்தீவு, ஜுன் 28

ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலையை மீள இயக்குதல் தொடர்பாக ஆராய நிபுணர் குழுவுடன் இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் நேற்று அங்கு சென்றார்.

இது தொடர்பில், அவர் கருத்து வெளியிடுகையில்,

அரசியலை தாண்டி எமது இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இந்த ஓட்டு தொழில்சாலை இயங்குவதன் மூலம் இந்தப் பிரதேச மக்கள் தமக்கான வேலைவாய்ப்பு கிடைக்கும் என நம்புகின்றார்கள்.

இதன் அடிப்படையில், 3 இயந்திரவியல் பொறியியலாளர்கள் ஒரு குடிசார் பொறியிலாளர், ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி உட்பட நிபுணத்துவ குழுவுடன் அங்கு சென்று கலந்துரையாடிய நிலையில் அரசாங்க கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படும் இந்த தொழில்சாலையை இயக்குவதற்கான சாத்தியகூற்று அறிக்கை ஒன்றை வரைந்து கைத்தொழில் அமைச்சருடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

பெரும் செயல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. மிகவும் எளிதாக இதனை இயங்க வைக்க முடியும். இதன் மூலம் வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்புக்கும் பெரும் பங்களிப்பை ஏற்படுத்தும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
28.06.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அளவுக்கதிகமான சமையல்காரர்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸுக்கு சென்றிருந்தவேளையில் புலம்பெயர் செயல்பாட்டாளர் ஒருவர் ஆங்கிலத்தில் பேசுவதற்கு கடினப்படுவதும் – அவரைப் பார்த்து ஆங்கிலம் தெரியாவிட்டால் தமிழில் பேசுங்கள் என்னால் புரிந்துகொள்ள முடியுமென்று ரணில் (சிரித்துக் கொண்டு) கூறுவதாக ஒரு காணொலி வெளியாகியிருக்கின்றது. இதே வேளை, அமெரிக்காவின் அழைப்பில் வெள்ளை மாளிகை மற்றும் இராஜாங்கத் திணைக்கள உயரதிகாரிகளுடன் கலந்துரையாடிய விடயம் தொடர்பில் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். மறுபுறம், ரணில் விக்கிரமசிங்க பொய்யுரைக்கிறாரெனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கூறியிருக்கின்றனர். இவைகள் அனைத்தையும் தொகுத்து பார்க்கும்போது ஒரு கூற்றே நினைவுக்கு வரும். அதாவது, “அளவுக்கதிகமான சமையல்காரர்கள் சேர்ந்து உணவை பழுதாக்கினார்கள்”.

2009இற்கு பின்னரான சூழலில், களத்திலும் புலத்திலும் ஏராளமான குரல்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன – குறிப்பாக, புலம்பெயர் சமூகத்தினர் மத்தியில் தமிழ் செயல்பாட்டாளர்கள் என்னும் பெயரில் ஏராளமானவர்கள் வெளிவந்திருக்கின்றனர். இவர்கள் யார் – இவர்களின் கடந்தகாலம் என்ன? – எவருக்கும் தெரியாது. அதேவேளை, புதுடில்லியை அணுகுகின்றோம் – அதற்காக பா. ஜ. கவை அணுகுகின்றோம் – ஆர். எஸ். எஸ். அமைப்பை அணுகின்றோம் – என்றவாறு இன்னொரு குழுவினர் இயங்கி வருகின்றனர். இவைகள் எதனை உணர்த்துகின்றன?

ஓர் ஒடுக்கப்பட்ட சமூகமாக தங்களை கருதுபவர்களுக்கு நிலத்தில் ஒரு வலுவான தலைமை அல்லது வலுவானதொரு தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய கூட்டு முன்னணியொன்று இருக்க வேண்டும். ஆனால், கடந்த 14 வருடங்களாக களத்தில் அவ்வாறானதொரு தலைமைத்துவத்தை தமிழ் கட்சிகளால் நிரூபிக்க முடியவில்லை. 2009இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே தமிழ் மக்களின் தலைமையாக அடையாளம் காணப்பட்டது. ஒப்பீட்டு அடிப்படையில், யுத்தத்துக்குப் பின்னரான அரசியல் சூழலில் கூட்டமைப்புக்கு ஒரு குரலிருந்தது. ஆனால், அந்தக் குரல் சிறுகச் சிறுக வலுவிழந்து இறுதியில் பல கட்சிகளாக தமிழர் அரசியல் சிதைவுற்றது. இப்போது இரண்டு பேர் இணைந்தால் ஒரு கட்சியென்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது. இதனை எவ்வாறு மாற்றியமைப்பது? வழியை சொல்லக் கூடிய நிலையில் எவருமில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் ஒவ்வொருவரும் தங்களுக்கு தெரிந்த நிலையில் அரசியலை கையாள முற்படுகின்றனர். இதன் விளைவு என்ன?

விளைவு மேலும் மேலும் தமிழர் அரசியல் சிதைவடைந்து செல்கின்றது. இந்த நிலைமையை சிங்கள ஆளும் வர்க்கம் சரியாகவே புரிந்து வைத்திருக்கின்றது. குறிப்பாக தந்திரங்களில் கைதேர்ந்த அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் சூழலின் பலவீனங்களை ஏனையவர்களை விடவும் நன்கறிவார். உண்மையில், மாகாண சபை விவகாரத்தில்கூட இந்தியாவின் வற்புறுத்தல்கள்தான் கொழும்புக்கு ஒரு பிரச்னையாக இருக்கின்றது. ஒருவேளை, இந்தியா இந்த விடயத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தாவிட்டால் இந்த விடயத்தைக்கூட அவர்கள் புறம்தள்ளிவிடலாம். ஏனெனில், மேற்குலகின் எல்லையை ரணில் நன்கறிவார். தவிர, மேற்குலகம் ரணிலின்மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கப் போவதுமில்லை.

களத்தில் தலைமைகளாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் இந்த நிலைமைகளை புரிந்துகொண்டு தங்களை ஆற்றலுள்ள தலைமைகளாக முன்னிறுத்த வேண்டும். களத்திலிருந்து புலத்துக்கு தலைமையை கொடுக்கக்கூடிய நிலைக்கு தங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாது அளவுக்கதிமான சமையல்காரர்களின் பிரச்னை ஒரு தொடர் கதையாகவே இருக்கும். சில நூறு டொலர்களை கொண்டு தாயக அசியலை தீர்மானிக்கலாமென்று நினைப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

# அஸ்வெசும மீள் பரிசீலனைக்குகூட மக்களிடம் நிதி வசூலிக்கப்படுகின்றது

## ஈ. பி. டி. பி. கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 28

அரசாங்கத்தால் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வறிய மக்களின் வாழ்வாதார மீள் எழுச்சிக்கான சமூக நலன்புரி உதவித்திட்ட நடைமுறைகளில் பல்வேறு குழப்பங்கள், பாரபட்சங்கள் காணப்படுகின்றன. அத்துடன், இந்தப் பட்டியலில் தமது பெயர் நீக்கப்பட்டமை தொடர்பில் ஆட்சேபனை செய்வதற்கான விண்ணப்பத்தை வழங்குவதில்கூட நிதி வசூலிப்பு மேற்கொள்ளப்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்று ஈ. பி. டி. பி. கட்சியின் பேச்சாளர் ஐ. சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்வாறான தவறுகளை நிவர்த்தி செய்வதுடன் குறித்த நிதி வசூலிப்பை உடன் நிறுத்தவதற்கான நடவடிக்கையை யாழ். மாவட்ட அரச அதிபர் எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய குறித்த தரவுகள் பிரதேச செயலகங்களில் அண்மைக்காலத்தில் உள்வாங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டமையால் மக்களுடனான தொடர்பும் அவர்களது குடும்ப நிலைமை தொடர்பான விவரங்களும் அவர்களுக்கு போதியளவில் இருந்திருக்கவில்லை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்களின் உண்மையான நிலைப்பாடும் தேவையானவர்களின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்ட நிலை உருவாகியுள்ளது. அதேவேளை தற்போது சமுர்த்தி பெறுகின்ற வறிய குடும்பங்கள் பலரின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சமூக நலன்புரி நன்மைகள் சபையின் பயானாளி தெரிவுக்கு குறித்த திட்டத்தில் உள்வாங்கப்படாத மக்களை மேன்முறையீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இதனால் தற்போது ஒவ்வொரு பிரதேச செயலகங்களின் முன்றலிலும் பல நூறு மக்கள் வரிரைசயில் காத்திருக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனையடுத்து ஒன்லைன் (நிகழ்நிலை) முறை ஊடாக ஆட்சேபனைகளை விண்ணப்பிக்குமாறும் அதனை பிரதேச செயலகங்கள் கண்காணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், குறித்த விண்ணப்பங்களை ஏற்பதில் பிரதேச செயலகங்களில் உள்ள வளப் பற்றாக்குறை மற்றும் இதர காரணங்களால் நிவர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளதால் தனியார் முகவர்கள் நிலையங்கள் இதனை மேற்கொள்வதில் அதிக கரிசனை காட்டிவருவதுடன் அதற்காக 300 ரூபாய் முதல் அதிக நிதி அறவீடு செய்யப்பட்டு வருவதாகவும் குறித்த விண்ணப்பத்தை விண்ணப்பிப்பதற்கே தாம் கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டு வருவதாகவும் வறிய மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே, வறிய மக்களுக்கான குறித்த திட்டத்தை மிக நேர்த்தியான முறையில் தேவையான பயனாளிகளுக்கு கிடைக்க வழிவகை செய்யும் வகையிலும் இவ்வாறான நிதி வசூலிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் யாழ். மாவட்ட செயலகம் மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாது இவ்வாறான தவறான அல்லது மக்களின் தேவை கருதியதான தரவுகளை திரட்டும் போது அதனை துல்லியமாக குறைபாடுகள் மற்றும் தவறுகள் ஏற்படாதிருப்பதற்கு அரச அதிகாரிகள் அதிக அக்கறை காட்டவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அஸ்வெசும கொடுப்பனவு கோரி உடையார்கட்டு மக்கள் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூன் 28

அரசாங்கத்தின் “அஸ்வெசும“ கொடுப்பனவை வழங்கக் கோரி முல்லைத்தீவு - உடையார்கட்டு சமுர்த்தி வங்கிக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தை நேற்று நடத்தினர்.


கவனவீர்ப்பை தொடர்ந்து கிராம மட்ட அமைப்புகளை சேர்ந்தவர்கள் சிலர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு சென்று அங்கு பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந்திடம் தங்கள் கோரிக்கை அடங்கிய மனுவை



கையளித் துள்ளார்கள்.

இதன்போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனிடமும் மனுவின் பிரதியை கையளித்தனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜூன் - 28 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆனி 13**
நல்ல நேரம் : 09.00 - 10.00
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : தசமி




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**இடபம்**
பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். நட்பு வட்டம் விரியும். பயணங்களால் பயனடைவீர்கள்.

**கடகம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கணுக்கால் வலிக்கும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத் தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக்கொடுப்பீர்கள். திடீர் சந்திப்பு நிகழும்.

**தனுசு**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். கடமை உணர்வுடன் செயல்படும் நாள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்**
தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்குவீர்கள். உடல் நலம் பாதிக்கும். முன்கோபத்தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள்.

**மீனம்**
கல்யாண முயற்சிகள் வெற்றியடையும். பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# ‘புலி’ என பொறித்த பானை ஓடு திருநெல்வேலியில் கண்டறிவு!

திருநெல்வேலி, ஜூன் 28

திருநெல்வேலி - துலுக்கர் பட்டியில் நடந்த அகழ்வாய் வில் தமிழி எழுத்தில் “புலி“ என்று பொறிக்கப்பட்ட கறுப்பு சிவப்பு வண்ண பானையோடு கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி அருகே நம்பி யாற்று படுகையில் வாழ்வியல் மேடு காணப்படுகிறது. இங்கு அகழாய்வுப் பணி 2021ஆம் ஆண்டு தொடங்கியது. முதல் கட்ட அகழாய்வில் செவ்வண் ணம், கறுப்பு சிவப்பு வண்ண மட்கல பானை ஓடுகள், பழந் தமிழர் குறியீடுகள், இரும்பு ஆபரணங்கள், உள்ளிட்ட 1,009 அரிய தொல்லியல் பொருட்கள் கிடைத்தன. தற் போது இரண்டாம் கட்ட அக ழாய்வு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தமிழி எழுத்து களில் “புலி” என்று பொறிக்கப் பட்டுள்ள கறுப்பு சிவப்பு வண்ண பானை ஓடு கண்டெ டுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு ருவிற்றர் பதிவில் தெரிவித் துள்ளார். (ஐ)

# மக்களுக்கு உதவாத பதவியை இராஜிநாமா செய்ய போகிறேன்

## ம. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்

மதுரை, ஜூன் 28

“2 ஆண்டுகளாக மக்களுக்கு எதுவும் செய்ய முடியவில்லை. இந்தப் பதவியை பெருமைக்கு வைத்து என்ன பயன்? அத னால், நான் எனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜி நாமா செய்யப் போகிறேன். இதனை வைகோவிடம் சொல்லிவிட்டு முதல்வரை சந்திக்கப் போகிறேன்” என்று மதுரை தெற்கு தொகுதி ம. தி. முக. க. சட்டமன்ற பூமிநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் விரக்தியில் கூறிய சம்பவம், அக்கட்சியைத் தாண்டி அவரை வெற்றி பெற வைத்த தி. மு. க. கட்சி வட்டாரத்திலும் அதிர்வலை களை ஏற்படுத்தியுள்ளது.

தி. மு. கவில் இருந்து பிரிந்து ம. தி. மு. கவை வைகோ ஆரம்பித்த காலம் முதல் அவருடன் பயணிப்பவர் மதுரை தெற்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் பூமிநாதன். இவர் நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் பேசியபோது,

நான் சட்டமன்ற உறுப்பின ராகி 2 ஆண்டுகளாகிவிட்டன. மக்களுக்கு சேவை செய்யவே இந்தப் பதவிக்கு வந்தேன். மாநகராட்சி கூட்டங்களில் தொடர்ந்து பேசி வருகிறேன். நேரிலும் சந்தித்து அதிகாரிக ளிடம் முறையிடுகிறேன். ஆனால், தொகுதி மக்களின் அடிப்படை பிரச்னைகளைகூட செய்து கொடுக்க முடிய வில்லை.

மக்களுக்கு உதவாத பத வியை பெருமைக்கு வைத்து என்ன பயன்? அதனால், நான் சட்டமன்ற உறுப்பினர் பத வியை இராஜிநாமா செய்ய லாம் என முடிவெடுத்துள்ளேன். இராஜிநாமா கடிதத்தை முதல் வரிடம் கொடுக்கப் போகி றேன். இதை எங்கள் தலைவர் வைகோவிடம் சொல்லப் போகிறேன்” என்றார். (ஐ)

# தி. மு.கவுக்கு மீண்டும் வருகின்றார் அழகிரி!

## ஜூலையில் இறுதி முடிவு



சென்னை, ஜூன் 28

தி. மு. கவில் இருந்து வெளி யேற்றப்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் மு. க. அழகிரி மீண் டும் கட்சியில் இணையவுள் ளார் என்று தகவல்கள் கசிந்துள் ளன. இதற்காக கருணாநிதி குடும்பம் பரபரப்பாக ஏற்பாடு களை செய்து வருகின்றது என்று கூறப்படுகிறது.

தி. மு. க. தென்மண்டல அமைப்பு செயலாளராக இருந்த மு. க. அழகிரியை, மகன் என்றும் பாராமல், முன்னாள் முதல்வர் கருணாநிதி சில கார ணங்களுக்காக கட்சியைவிட்டு வெளியேற்றி னார். இதனால் தி. மு. கவில் மிகப்பெரிய பிளவு ஏற்படுமென என எதிர் பார்க்கப்பட்ட நிலையில் அழ கிரி கட்சிக்கு எதிராக பேசு வதை மட்டுமே வழக்கமாக வைத்திருந்தார்.

கருணாநிதி மறைவுக்குப் பின் தி. மு. கவுக்குள் நுழைய முயன்ற அழகிரி, இதற்காகவே தமது ஆதரவாளர்களை கூட்டி ஆலோசனை நடத்தி சென்னை யில் பேரணி எல்லாம் நடத்தி னார். முயற்சிகள் கைகூட வில்லை.

எனினும், 2021 சட்ட சபை தேர்தலில் தி. மு. க. வென்றதும் ஸ்டாலினுக்கு வாழ்த்து அனுப்பி னார். உதயநிதி ஸ்டாலின் அமைச்சரானபோது பெரிய தந்தையான அழகிரியிடம் ஆசீர் வாதம் வாங்கியிருந்தார். அப் போது உதயநிதி அவரை கட் சிக்கு திரும்புமாறு அழைத்தார்.

இந்த நிலையில், வரும் ஜூலை மாதம் கருணா நிதி வீட்டில் குடும்ப நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது. இதில் அழகிரி பங்கேற்கவுள்ளார். இதன்போது முதல்வர் ஸ்டா லினும் அழகிரியும் நேரில் சந் தித்து பேசவுள்ளனர். இதன் போது, அரசியல் ரீதியான முக் கிய முடிவுகள் எடுக்கப் படும் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை தொடர்பாக பேச்சு நடத்தவில்லை

## கே. எஸ். அழகிரி தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 28

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவி குறித்து காங்கி ரஸ் கட்சியின் தலைவருடன் விவாதிக்கவில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித் துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி, டில்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கேவை சந்தித்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், “தமிழ்நாடு காங் கிரஸ் தலைவர் பதவி குறித்து விவாதிக்கவில்லை” என்றார்.

“பொறுப்பில் தொடர்ந்தா லும் மகிழ்ச்சிதான், தலைவர் பொறுப்பு வேறொருவருக்கு வழங்கப்பட்டாலும் மகிழ்ச்சி தான். யார் தலைவராக இருந் தாலும் 2024 மக்களவை தேர் தலை ஒற்றுமையாக சந்திப் போம். தமிழக அரசியல் சூழல் அ. தி. மு. க.- பா. ஜ. கவின் செயல்பாடுகள் குறித்து ஆலோ சித்தோம்“ என்றும் கே.எஸ். அழகிரி கூறினார்.

காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, ராகுல் இருவரும் டில்லியில் கட்சி விவகாரங்கள் பற்றி ஆலோசித்து வருவதால் இந்த வார இறுதிக்குள் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் குறித்து தங் கள் முடிவை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவு இலங்கைக்கு தொடர்ந்தும் தேவை

## ருமேனிய வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்திய பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஜுன் 28

**ஐரோப்பிய ஒன்றியத்தின் தொடர்ச்சியான ஆதரவு நாட்டுக்கு தேவை என ருமேனிய வெளி விவகார அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.**

**இரு தரப்பு உறவுகள், பொருளாதார ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் தொழில் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் ருமேனிய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் அலரி மாளிகையில் சந்திப் பொன்று இடம் பெற்றது.**



இதன்போது ருமேனிய தலைநகர் புக்கரெஸ்டில் இலங்கை தூதரகத்தை திறக்க தீர்மானித்தமைக்காக ருமேனிய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு நன்றி தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களில் பெருமளவிலான இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியமைக்காக ருமேனிய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்த பிரதமர், 2016 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையர்களுக்கு மிகவும் பிரபலமான வேலைத் தளமாக ருமேனியா இருந்து வருவதாகவும்,

ஆடை, கட்டுமானம், ஹோட்டல், விவசாயம் ஆகிய துறைகளில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ருமேனியா தற்போது பாரிய உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தி வருவதால், இலங்கையர்களுக்கு மேலதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதாக ருமேனிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் கல்வி, விவசாயம், ரயில்வே, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலாத்துறையில் முதலீடு செய்வது குறித்து பரிசீலிக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பான பிரச்னைகளை தீர்ப்பதற்கு இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்த அவர், ஐரோப்பிய ஒன்றியத்தின் தொடர்ச்சியான ஆதரவு நாட்டுக்கு தேவை எனவும் வலியுறுத்தினார். (அ)

# உ.கிழங்குடன் ஹெரோயின் கடத்திய மூன்று பேர் கைது!

கொழும்பு, ஜுன் 28

உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யும் போர்வையில் 16 கிலோ 193 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கொண்டு வரப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்கத் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் இணைந்து பாகிஸ்தானில் இருந்து கொண்டு வரப்பட்ட உருளைக்கிழங்கு அடங்கிய கொள்கலன் ஒன்றை சோதனைக்கு உட்படுத்தினர்.

அதில் 12 பொதிகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இதன்படி, கொள்கலனை இறக்குமதி செய்த நிறுவனத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய ஒருவர், கொள்கலனை பெற்றுக்கொள்வதற்கு தயாராக இருந்த நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் அதற்கு உதவிய ஒருவர் அடங்கலாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசின் அஸ்வெசும திட்டம் நல்லது அது சகலருக்கும் பயன்படவேண்டும்

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஜுன் 28

'அஸ்வெசும' நலன்புரி வேலைத்திட்டம் நல்லதாக இருந்தாலும் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் அடிமட்டத்தில் இருந்து அமுல்படுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் நிறைவேற்றுச் சபை நேற்று கூடியபோது அவர் இதனை தெரிவித்தார்.

நிவாரணத் திட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் செயல்பாடுகள் தொடர்பில் குழப்பநிலை நிலவுவதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி என்ற வகையில் முறையான கணக்கெடுப்பின் அவசியத்தை



எடுத்துரைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பரிந்துரையின்படி மின் நுகர்வு அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டால் 80 வீதத்துக்கும் அதிகமான வேலைத் திட்டம் வெற்றியடையும் என்று அவர் குறிப்பிட்டார். (அ)

# கொழும்பு துறைமுக நகரத்தில் புதிய சீன முதலீட்டுத் திட்டம்!



கொழும்பு, ஜுன் 28

கொழும்பு துறைமுக நகரத்தில் 1.2 பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய தயாராகி வருவதாக, சீனா ஹார்பர் என்ஜினியரிங் தலைவர் தெரிவித்தார்.

சீனா ஹார்பர் என்ஜினியரிங் தலைவர் பாய் யின்ஷானுக்கும், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீஜிங்கில் உள்ள என்ஜினியரிங் கூட்டுறவு பிரதான அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றதாக, அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டரில் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதியின் இல்லம் தீ பற்றியதை நேரலையாக ஒளிபரப்பியவர் கைது!

கொழும்பு, ஜுன் 28

சமூக ஆர்வலர் பியத் நிகேஷலா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜுலை 09 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கு தீ வைத்த சம்பவத்தை நேரலையில் ஒளிபரப்பிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பான வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக குறித்த செயல்பாட்டாளர் நேற்று முன் தினம் குற்றப்



புலனாய்வுப் பிரிவின் முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். (அ)

# 61ஆயிரம் சுற்றுலா பயணிகள் 20 நாட்களில் நாட்டுக்கு வருகை

கொழும்பு, ஜுன் 28

இந்த மாதத்தின் முதல் 20 நாட்களில் இலங்கைக்கு 61 ஆயிரத்து 183 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தகவல்கள் தெரிவித்தன.

ஜுன் மாதத்தில் 87 ஆயிரத்து 521 சர்வதேச சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டுள்ள நிலையில், இலங்கை தனது இலக்கில் 70 வீதத்தை அடைந்துள்ளது. இதன்படி, ஜுன் மாதத்தின் 21ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில், 26 ஆயிரத்து 338 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரவேண்டும்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜுன் மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 5 இலட்சத்து 85 ஆயிரத்து 669 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். (அ)

# நிமல் லான்சாவால் சிக்கல்!

கொழும்பு, ஜுன் 28

சுயாதீன பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்டு வரும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா ஜனாதிபதி செயலகத்தில் தனது அலுவலகம் ஒன்றை வைத்திருப்பது குறித்து ஜனாதிபதி செயலகத்துக்குள் அதிருப்தி உருவாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிமல் லான்சா ஜனாதிபதி செயலகச் சூழலைப் பயன்படுத்தி



மேற்கொண்டு வரும் சில கொடுக்கல், வாங்கல்கள் குறித்து ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானிக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நிமல் லான்சாவை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெளியேற்றும் நோக்கில் அவருக்கு தனியான அலுவலகத்தை நடத்த கொழும்பு மலலசேகர மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு வழங்கிய வீட்டைக் கொடுத்தபோதிலும் அவர் தொடர்ந்தும் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வருகிறாரெனக் கூறப்படுகின்றது. (அ)

# புவிசார் அரசியல் போட்டியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை!

## சீன தொலைக்காட்சிக்கு நாமல் செவ்வி

கொழும்பு, ஜுன் 28

**இலங்கை கடந்த இரண்டு தசாப்த காலமாக புவிசார்அரசியல் போட்டியினால் பாதிக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**சீனாவின் அரச தொலைக்காட்சியான சி.ஜி.டி.என்னுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறினார்.**

சீனாவுடன் நட்புறவை வலுப்படுத்துவது குறித்த இலங்கையின் ஆர்வம் தொடர்பில் நாமல் கருத்து வெளியிட்டுள்ளார்.

மக்கள் மத்தியிலான உறவுகளை மீள ஆரம்பிக்கவேண்டிய தருணம் இது என நாங்கள் கருதுகின்றோம் என தெரிவித்துள்ள அவர், அரசியல் கட்சிகள்-அரசாங்கங்கள் மத்தியிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதுடன் மாத்திரமல்லாமல் பொதுமக்கள் மத்தியிலான உறவுகளையும் வலுப்படுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இலங்கையும் சீனாவும் நீண்டகால நண்பர்கள். இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் நன்மைகள் ஏற்பட்டுள்ளன. மிகவும் நெருக்கடியான காலங்களில் சீனா இலங்கைக்கு ஆதரவாக விளங்கியுள்ளது. அதேபோன்று சீனா எப்போதும் ஒரு சீனக் கொள்கையை கடைப்பிடித்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் சீனாவுக்கு தற்போது விஜயம் மேற்கொண்டுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள நாமல்,



வருட இறுதியில் ஜனாதிபதியும் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்வார் என நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயம், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், ஏனைய மூலோபாயத் திட்டங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த உதவும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச வல்லரசுகளின் போட்டியில் பல நாடுகள் பக்கம் சாய்வதை தவிர்க்கும் போக்கு அதிகரித்துள்ளமை குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள நாமல் ராஜபக்ஷ, நாங்கள் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்ற புவியியல் வேறுபாடுகள் குறித்து கவனம் செலுத்தக்கூடாது. நாடுகளுக்கு இடையில்-சர்வதேச அபிவிருத்தி சகாக்கள் மத்தியில் பரஸ்பர நலன்கள் அடிப்படையில் இந்த விடயத்தை அணுக வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சீனாவின் கடன்பொறி குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், இது புவிசார் அரசியல் தொடர்பானது. துரதிர்ஷ்டவசமாக இலங்கை கடந்த இரண்டு தசாப்தங்களாக புவிசார் அரசியல் மோதலில் சிக்குண்டுள்ளது எனக் குறிப்பிட்டார். (அ)

# கடவுச்சீட்டு கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜுன் 28

ஒருநாள் சேவையின் கீழ் பெறப்படும் கடவுச்சீட்டுக்கான கட்டணங்களை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு நாள் சேவை மூலம் கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கு இதுவரை காலமும் பெறப்பட்டு வந்த 20,ஆயிரம் ரூபாய் கட்டணம் அறவிடப்படு கிறது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தில் மூலம் ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்கும் நடைமுறையில் அதனை குறைக்கத் திட்டமிட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹவர் இலுக்பிட்டிய தெரிவித்தார்.

அதற்கமைய 20 ஆயிரம் ரூபாயிலிருந்து அது 15 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கட்டுப்பாட்டாளர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் புதிய திட்டத்தின் கீழ், ஒன்லைன் மூலமாக விண்ணப்பிப்போர் வழமையான முறைமையின் கீழ், 14 நாட்களுக்குள் தமக்கான கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் விசேட சேவை மூலம் இதனை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிப்பவர்கள், கொரியர் சேவை மூலம் மூன்று தினங்களில் இதனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹவர் இலுக்

# புதிய தொழிலாளர் சட்டம் குறித்து பொதுசன வாக்கெடுப்பு அவசியம்

## தொழில்சங்க பிரதிநிதிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜுன் 28

அரசாங்கம் கொண்டுவரவுள்ள தொழிலாளர் சட்டத் திருத்த சட்டமூலம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில் சங்கங்கள் மற்றும் தொழில் அமைச்சரினால் அதிலிருந்து நீக்கப்பட்ட தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தொழிலாளர் திருத்தச்சட்ட வரைவை தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபைக்கு வழங்கிய பின்னர் அதனை பகிரங்கப்படுத்தவேண்டும் என தொழிற்சங்கங்கள் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் தெரிவிக்கவுள்ளன.

மக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெறுவதற்கு ஒரு சுயாதீனமான மற்றும் வெளிப்படையான ஆணைக் குழு நிறுவப்படவேண்டும் என வும்இந்தக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தொழிலாளர் வர்க்க இயக்கத்தை அழிவுக்கு கொண்டு செல்லும் அரசின் திட்டங்களை முறியடிக்கும் வகையில் தொழில்சங்கங்கள் வேறுபாடுகள் மற்றும் பேதங்களை மறந்து ஒன்றிணையவேண்டும் எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவை ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்க்ஸ் இந்த கூட்டின் அழைப்பாளராக ஏகமனதாக நியமிக்கப்பட்டார்.

பணியிடத்தில் தொழில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் அரசாங்கம், முதலாளிகள் மற்றும் தொழில்சங்கங்களால் பராமரிக்கப்படும் முத்தரப்பு சங்கமாக கருதப்படும் தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபையில் இருந்து நான்கு முக்கிய தொழில்சங்கங்களை நீக்குவதற்கு தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கம், இலங்கை வர்த்தகம், கைத்தொழில் மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கம், இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் மற்றும் ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் ஆகியன தொழில் அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்கி வட்டிவீதங்கள் குறைக்கப்படலாம்?

கொழும்பு, ஜுன் 28

ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் பல்வேறு வர்த்தக வங்கி கள் தங்களது கடன் அட்டை களுக்கான வட்டிவீதங்களை குறைக்க தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் மத்திய வங்கியின் நாணயச் சபை, கடன் மற்றும் வைப்புக் கொள்கை வட்டி வீதங்களை குறைத்திருந்தது.

இதனை அடுத்து வங்கிகள் தங்களது வட்டி வீதங்களை குறைக்கும் என்ற எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் கடன்களுக்கான வட்டிவீதங்கள் தொடர்பாக இதுவரை தகவல் எதுவும் வெளியாகவில்லை. (அ)

# இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை!

## தந்தை படுகாயம்

கொழும்பு, ஜுன் 28

ஹிங்குராங்கெத்த பிரதேசத்தில் காணிப் பிரச்னையால் இளைஞர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டார்.

முகத்தில் மிளகாய் பொடியை வீசி தலையில் சுத்தியலால் தாக்கப்பட்டதில் தந்தையும் மகனும் படுகாயம் அடைந்தனர். அவர்களில் 22 வயதுடைய மகன் கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார்.

தங்கவேலு சண்தலு சந்துஷ் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

ஜப்பானில் வேலை பெறுவதற்காக அவர் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

ஹிங்குராங்கெத்த உடவத்தகும்புரவில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் பின்னர் சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு மிளகாய் பொடியை கொடுத்த பெண் ஒருவரை ஹிங்குராங்கெத்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணி ஒன்றின் உரிமை தொடர்பில் இவ்விரு குழுக்களுக்கிடையில் தகராறு ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றதையடுத்து பிரதான சந்தேக நபரின் வீட்டுக்குச் சிலர் தீ வைத்து எரித்துள்ளனர்.

தலைமறைவான சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை ஹிங்குராங்கெத்த பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சமுர்த்தி தெரிவுகளில் முறைகேடுகள் நடந்திருந்தால் மேன்முறையீடு செய்க!

## யாழ். அரச அதிபர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி தெரிவில் ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் பாதிக்கப்பட்டோர் தங்கள் மேன்முறையீடுகளை ஜுலை மாதம் 10 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கமுடியும். எனவே அந்த விடயம் தொடர்பில் பொது மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார் .

சமுர்த்தி தெரிவில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொதுமக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமுர்த்தி தெரிவில் ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் எதிர்வரும் ஜுலை 10ஆம் திகதி வரை தங்கள் மேன் முறையீடுகளை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க முடியும். அந்த மேல்முறையீடுகள் பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவ டிக்கை எடுக்கப்படும். எனவே இது தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை.-என்றார்.

அரசாங்கத்தின் நலன்புரி உதவித்திட்டமான சமுர்த்தி பதிவுகளில் முறைகேடு என யாழ்ப்பாணத்தில் சில பிரதேச செயலகங்கள் முன்பாகக் கூடிய மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 100 மாணவர்களுக்கு குறைவான 2,000 பாடசாலைகளை மூடத் திட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் தகவல்

கொழும்பு, ஜூன் 28

"தேசிய கல்வி மறுசீரமைப்பு" வேலைத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள பாடசாலை மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியாக குறைந்த மாணவர்களைக் கொண்ட 2 ஆயிரம் பாடசாலைகளை மூடும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன் காரணமாக குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த 3 வருடங்களில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட சுமார் 300 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலை மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் கொத்தணி பாடசாலை முறை, தேசிய பாடசாலை அமைப்பு, தேசிய பாடசாலைகளுடன் இணைக்கப்பட்ட பாடசாலை வலையமைப்பு உருவாக்கப்படும் என்று திட்டமிடல் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும், அதற்கான அபிவிருத்தி வளங்கள் அப்பாடசாலைகளில் இல்லை.

தற்போது நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் 40,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை வழங்கவேண்டும் என்பதால் குறைந்த சதவீத மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகள் மூடப்படுகின்றன. நூற்றுக் கும் குறைவான மாணவர்களைக் கொண்ட கிராமப் பகுதிகளில் இத்தகைய பாடசாலைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

இவ்வாறான பாடசாலைகள் மூடப்படுமாயின் அப்பகுதிகளில் உள்ள பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளை இழக்க நேரிடும். ஒதுக்குப்புறமான கிராமங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்கு 10 முதல் 14 கிலோமீற்றர் தூரம் வரை பாடசாலைகள் கிடைப்பதில்லை.

தேசியக் கல்விச் சீர்திருத்தத் திட்டத்தில் உள்ள நல்ல விடயங்களைச் செயல்படுத்தாமல், பொருளாதார ரீதியில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் திறன் கொண்டவற்றை மட்டுமே அரசு செயல்படுத்த முயல்கிறது.

இந்தத் திட்டத் திட்டத்தில் தொகுதி முறை, தொலைதூரக் கல்வி முறை, மாணவர் அடிப்படையிலான கல்வி முறை தொடர்பான அத்தியாவசிய முன்மொழிவுகளைத் தவிர்த்துவிட்டு, பாடசாலைகளை மூடுவதே முன்னுரிமையாகி 100 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 2ஆயிரம் பாடசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏராளமான பணம் செலவழித்து இந்த திட்டத்தை செயல்படுத்துவது குறித்து அதிகாரிகள் வெளிநாடுகளுக்குக்கூட சென்று ஆய்வு செய்துள்ளனர்.

தேசியக் கல்விச் சீர்திருத்தத் திட்டம் தொடர்பான முன்மொழிவுகள் அடங்கிய பல இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட புத்தகம் மட்டுமே இப்போது எஞ்சியுள்ளது-என்றார்.

# இராஜாங்க அமைச்சர்களாக உள்ள அனைவரும் பதவி விலகவேண்டும்!

## லலித் எல்லாவல எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் இராஜாங்க அமைச்சர்களாக பதவி வகித்து வருவோரை அந்த பதவியை விட்டு விலகுமாறு களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல கோரியுள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராஜாங்க அமைச்சர்களுக்காக மாதமொன்றுக்கு 10 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இந்த பணத்தைக் கொண்டு வைத்தியசாலைகளில் தட்டுப்பாடாகக் காணப்படும் மருந்து பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

கடந்த மே மாதம் முதல் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பெட் ஸ்கானர் ஊடாக செய்யப்படும் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

இதனை தனியார் வைத்தியசாலை ஒன்றில் மேற்கொண்டால் மூன்று இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பணம் தேவைப்படும்.

வைத்தியசாலைகளில் மருந்து பொருளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் அமைச்சர்கள் வழமை போன்று வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதுடன், தங்களது பணியாளர்களையும் வெளிநாட்டு பயணங்களுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

இராஜாங்க அமைச்சர்களின் ஊடாக நாட்டுக்கு நன்மை கிடைக்கவில்லை. கிடைக்கும் வரப் பிரசாதங்களை அவர்கள் அனுபவித்து வருகின்றனர். பயன் எதுவும் இன்றி அமைச்சுப் பதவி வகிப்பதில் என்ன அவசியம்.

அனைத்து இராஜாங்க அமைச்சர்களும் பதவி விலகுவதுடன், அமைச்சரவை அமைச்சர்கள் 20 பேர் நியமிக்கப்பட்டு ஏனையவர்கள் செயல்குழுக்களின் ஊடாக நாட்டுக்கு சேவை வழங்க முடியும்-என்றார். (அ)

# சப்ரகமுவ ஆளுநர் செயலகம் நேற்று முதல் டிஜிற்றல் மயம்

கொழும்பு, ஜூன் 28

சப்ரகமுவ மாகாண சபைக்கு உட்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை அவதானிக்கும் இணையவழி முறைமையை சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க இந்த இணையவழி முறையை நேற்று ஆளுநர் அலுவலகத்தில் ஆரம்பித்து வைத்தார்.

சப்ரகமுவ மாகாண தகவல் தொழில்நுட்பப் பிரிவு இதனை வடிவமைத்து பராமரிக்கும் என அலுவலகம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாண சபைக்குச் சொந்தமான 1,680 நிறுவனங்களும் திணைக்களங்களும் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் ஊடாக அவதானிக்கப்படுவதுடன், அனைத்து கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக கடதாசி பயன்பாட்டை குறைப்பதும் இதன் நோக்கமாகும்.

மேலும், இந்த முறைமையின் ஊடாக தாமதங்கள் மற்றும் ஏனைய பிழைகளைத் தடுக்கக் கூடிய வழிமுறைகள் காணப்படுவதாகவும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் பதிவுக் கட்டணம் இரு மடங்காகியது

கொழும்பு, ஜூன் 28

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் பதிவுக் கட்டணம் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிவித்துள்ளது,

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் பதிவுக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் பதிவுக் கட்டணம் 50 ஆயிரம் ரூபாயில் இருந்து ஒரு இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# அதிகாரியை அச்சுறுத்திய இராணுவ சிப்பாய் கைது!

கொழும்பு, ஜூன் 28

மின்சார கட்டணம் செலுத்தப்படாத வீடொன்றில் மின்சாரத்தை துண்டிக்கச் சென்ற அதிகாரி ஒருவரை இராணுவத்தின் லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி ஒருவர் அச்சுறுத்தியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த இராணுவ லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் பனல்வ இராணுவ பீரங்கி படை முகாமில் கடமையாற்றுபவர் ஆவார்.

திவுலப்பிட்டியில் உள்ள வீட்டில் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாத காரணத்தால் திவுலப்பிட்டி மின் பொறியியல் அலுவலக அதிகாரிகள் மின்சாரத்தை துண்டிக்கச் சென்றுள்ளனர்.

குறித்த குழுவினர் மின்சாரத்தை துண்டிக்க ஆயத்தமான போது, வீட்டின் உரிமையாளர் என கூறப்படும் லெப்டினன்ட் கேணல், மின்சார சபை ஊழியர்களை அச்சுறுத்தியதையடுத்து, குறித்த லெப்டினன்ட் கேணல் திவுலப்பிட்டி பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். (அ)

# ஓர் ஆண்டில் நாய் கடிக்கு இலக்காகும் 2 இலட்சம் பேர்!

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் விசர்நாய்க் கடிக்குள்ளாவதாக சுகாதார அமைச்சின் விபத்து தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், ஆண்டொன்றுக்கு மூன்று இலட்சம் பேர் விலங்குக் கடிக்குள்ளாவதுடன் அவர்களுள் ஒரு இலட்சம் பேர் கடுமையான பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அனைத்து விதமான விலங்கு கடிக்குள்ளாவோரின் சிகிச்சைகளுக்காக ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இது குறித்து சுகாதார அமைச்சின் விபத்து தடுப்புப் பிரிவின் பிரதானி, விசேட வைத்தியர் சமித சிறிதுங்க மேலும் தெரிவிக்கையில்-

விலங்குக் கடிக்குள்ளாகும் ஒருவருக்கு பெற்றுக்கொடுக்கப்படும் நான்கு வகையான தடுப்பூசிகளுக்காக 10ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது.

அத்தோடு அதற்கும் மேலதிகமாக பெற்றுக்கொடுக்கப்படும் மருந்துகளுக்காக ஒரு இலட்சம் ரூபாவரை செலவிடப்படுகிறது-என்றார்.

இந்நிலையில், நாட்டில் ஆண்டொன்றுக்கு விலங்கு கடிக்குள்ளாவோரில் 80 சதவீதமானோர் விசர்நாய்க் கடிக்குள்ளானோர் என சுகாதார அமைச்சின் விபத்து தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி ஆண்டொன்றுக்கு 2 இலட்சத்து 40ஆயிரம் பேர் விசர்நாய்க் கடிக்குள்ளாகின்றனர். இவ்வாறான அனர்த்தங்களில் 50 சதவீதமான அனர்த்தங்கள் வீட்டில் இடம்பெறும் அனர்த்தங்களாகும். (அ)

# இந்தியாவில் முஸ்லிம்கள் உரிமை குறித்து பேசிய ஒபாமா: நிர்மலா சீதாராமன் எழுப்பிய கேள்வி!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறை பயணமாக அமெரிக்க சென்றிருந்தபோது, முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்த கருத்துக்கு, இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதிலடி கொடுத்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதமர், அதிபர் பைடனுடன் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது இந்தியாவில் முஸ்லிம்களின் உரிமை குறித்து செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விக்கு இந்தியாவில் பாகுபாடு என்பதற்கே இடமில்லை என்று மோடி பதிலளித்தார். இதற்கிடையே, பிரதமர் அமெரிக்காவில் இருக்கும்போது அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா சி.என்.என் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தபோது இந்தியாவில் முஸ்லிம் சிறுபான்மையின் உரிமைகள் பற்றி விமர்சிக்கும் வகையில் பேசினார்.

ஒபாமாவின் கருத்துக்கு மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் எதிர்வினையாற்றியுள்ளார்.

"ஒபாமா ஆட்சியில் இருக்கும்போது முஸ்லிம்கள் அதிகமாக வாழும் 6 நாடுகள் மீது அமெரிக்கா குண்டு வீசியுள்ளது. அப்படியிருக்கும்போது, மக்கள் அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டை உண்மையென்று நம்புவார்களா?" என்று கேள்வியெழுப்பியுள்ளார் நிர்மலா சீதாராமன்.



பிரதமர் நரேந்திர மோடி ஜுன் 20ஆம் தேதியன்று தனது முதல் அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்றபோது, பைடன் அரசு அவரை மிகச் சிறப்பாகக் கவனிக்க வேண்டும் என்பதில் பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டன.

ஆனால், இதற்கிடையே மோடி அரசு பெருமான்மை அரசியல் செய்வதாக ஒபாமா முன்வைத்த கருத்து மீதான விவாதம் சூடுபிடித்தது.

பிரதமர் மோடி அமெரிக்கா சென்றதுமே, அந்நாட்டின் பல எம்.பிக்கள் மற்றும் மனித உரிமை குழுக்கள் இந்தியாவில் மனித உரிமை மீறல், ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல் தொடர்பான கேள்விகளை எழுப்பத் தொடங்கினர். ஆனால், ஒபாமாவின் கருத்துக்குப் பிறகு, இந்தக் கேள்விகள் மீது அதிக கவனம் குவியத் தொடங்கியது.

இதற்குப் பிறகு, கடந்த வாரம் வெள்ளை மாளிகையில் அதிபர் பைடனை பிரதமர் சந்தித்த பிறகு, இருவரும் கூட்டாகச் சேர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்தனர். வால் ஸ்ட்ரீட் ஜர்னலின் அமெரிக்க செய்தியாளர் சப்ரினா சித்திக் இந்தியாவில் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் தொடர்பான பிரச்னைகள் குறித்த கேள்விகளைக் கேட்டார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த பிரதமர், ஜனநாயகம் என்பது இந்தியாவின் மரபணுவிலேயே உள்ளது என்று கூறினார்.

பாஜக ஆட்சி செய்யும் அசாம் மாநிலத்தின் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, ஒபாமா குறித்து ட்விட்டரில் கருத்து தெரிவித்தார். அந்த ட்வீட் இஸ்லாமிய வெறுப்பு கருத்தாகப் பார்க்கப்பட்ட நிலையில், தற்போது நிதியமைச்சரும் ஒபாமாவை குறிவைத்து விமர்சித்துள்ளார்.

### ஒபாமா பேசியது என்ன?

அமெரிக்க செய்தியாளரான கிறிஸ்டியன் அமன்போர் ஒபாமாவிடம், "அதிபர் பைடன் தனது நிர்வாகத்தின் மையமாகத் தற்காப்பு ஜனநாயகத்தை உருவாக்கியுள்ளார். உலகளவில் ஜனநாயகம் ஆபத்தில் இருக்கும் காலகட்டம் இது.

சர்வாதிகாரிகள், சர்வாதிகாரங்களால் ஜனநாயகம் சவாலுக்கு உள்ளாகி வருகிறது. தாராளவாத ஜனநாயக நாடுகளிலும் அது சவாலுக்கு உள்ளாகிறது. சீன அதிபரை பைடன் சர்வாதிகாரி எனக் கூறுகிறார். இந்நிலையில், எதேச்சதிகாரியாக அல்லது குறைந்த அளவு தாராளவாத ஜனநாயகவாதியாகக் கருதப்படும் பிரதமர் மோடியை



ஜோ பைடன் எவ்வாறு கையாள வேண்டும்?" என்று கேள்வியெழுப்பினார்.

அப்போது, மோடியுடன் தனக்குப் பேச வாய்ப்பு கிடைத்திருந்தால், சிறுபான்மையினர் குறித்துப் பேசியிருப்பேன் என்று இஸ்லாமியர்களின் பாதுகாப்பை மேற்கோள் காட்டிக் கூறினார் ஒபாமா.

அப்போது, "இந்து பெரும்பான்மையான இந்தியாவில் முஸ்லிம் சிறுபான்மையினரின் பாதுகாப்பு குறிப்பிடத்தக்கது. பிரதமர் மோடியுடன் நான் உரையாடியிருந்தால், இந்தியாவில் சிறுபான்மையினரின் உரிமைகளை நீங்கள் பாதுகாக்கவில்லை என்றால், இந்தியா ஒரு கட்டத்தில் பிளவுபடுவதற்கான வாய்ப்பு வலுவாக உள்ளது. அது இந்தியாவின் நலன்களுக்கு எதிரானது," என்று தெரிவித்தார்.

பராக் ஒபாமாவை குறிவைத்து கருத்து தெரிவித்த அசாம் முதல்வர், வெள்ளிக்கிழமையன்று, "இந்தியாவிலும் பல ஹூசேன் ஒபாமாக்கள் இருக்கிறார்கள். நாம் வாஷிங்டன் வரையிலும் செல்வதற்கு முன்பாக அவர்களைப் பற்றி விசாரிக்க வேண்டும். அசாம் காவல்துறை அதற்கு முன்னுரிமை அளித்துச் செயல்படும்," என்று பதிவிட்டார்.

அவரது இந்தப் பதிவு சமூக ஊடகங்கள் முதல் அமெரிக்க பத்திரிகைகள் வரை விவாதிக்கப்படுகிறது. இந்த வரிசையில் தற்போது நிதியமைச்சரும் இணைந்துள்ளார்.

அவர் ஞாயிற்றுக்கிழமையன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது ஒபாமாவின் கருத்து குறித்து விமர்சித்ததோடு, அதன் நம்பகத்தன்மையை கேள்விக்கு உள்ளாக்கினார்.

அப்போது, "அமெரிக்காவுடன் நல்ல நட்புறவை நாங்கள் விரும்புகிறோம். ஆனால், மத சகிப்புத்தன்மை பற்றிய கருத்துகள் அவர்கள் தரப்பிலிருந்து வருகின்றன. முன்னாள் அதிபர் சில விஷயங்களைக் கூறுகிறார்.

அவருடைய ஆட்சியின்கீழ், சிரியா, ஏமன், சவூதி, ஈராக் என்று முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஆறு நாடுகளில் குண்டுகள் வீசப்பட்டன. ஏழு நாடுகளில் போர் போன்ற சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. சுமார் 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன.

இதுபோன்ற நாடுகள் இந்தியா மீது குற்றச்சாட்டுகளைக் கூறும்போது, அதை யார் நம்புவார்கள்?"என்று கூறினார் நிர்மலா சீதாராமன்.

இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் ஒபாமாவின் கருத்துக்கு எதிர்வினையாற்றியுள்ளார். இந்தியா மதத்தின் அடிப்படையில் யார் மீதும் பாகுபாடு காட்டவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் மதச்சார்பற்ற கொள்கையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்" என்றும் "இந்தியாவில் சிறுபான்மை உரிமை குறித்து பேசுபவர்கள் எத்தனை முஸ்லிம் நாடுகள் மீது தாக்குதல் நடத்தினர் என்பது குறித்தும் யோசிக்க வேண்டும்" என்று ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

### ஒபாமா மீதான விமர்சனம்

ஒபாமா குறித்துக் கூறப்படும் கருத்துகளைப் பற்றி வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

பாஜகவின் வளர்ந்து வரும் தலைவரான அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, இந்தியாவின் 'பல ஹூசைன் ஒபாமாக்களை' விசாரிக்குமாறு இந்திய காவல்துறையிடம் கேட்டுக்கொண்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க ஊடகங்களில் வெளியான செய்தியில் பிரதமர் மோடி தொடர்பான ஒரு விஷயம் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆண்டுகளில் நரேந்திர மோடி ஒரு பிரதமராக நேரலையில் செய்தியாளர் சந்திப்பில் கேள்விகளை எதிர்கொள்வது இதுவே முதல்முறை என்பதுதான் அந்தக் குறிப்பிட்ட ஒரு விஷயம்.

இவற்றோடு சேர்த்து, நரேந்திர மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது எப்படி அவர்மீது அமெரிக்கா வருவதற்குத் தடை விதிக்கப்பட்டது என்பதும் தொடர்ந்து விவாதிக்கப்படுகிறது. கடந்த 2002ஆம் ஆண்டு நரேந்திர மோடி முதல்வராக இருந்தபோது, குஜராத்தில் கடுமையான வகுப்புவாத கலவரம் ஏற்பட்டது.

அமெரிக்க செய்தி சேனலான சி.என்.என்னும் கூட மோடியின் வருகையை விரிவாக ஒளிபரப்பியது. சி.என்.என் தனது செய்தியில், "மோடியின் புகழ் இந்தியாவில் பரவியுள்ளது. ஆனால், சர்வாதிகாரத்தின் மீதான அவரது சாய்வு மேற்குலக நாடுகளைக் கவலைகொள்ளச் செய்கிறது," என்று விமர்சித்தது.

"இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது. ஆசியாவில் பைடனின் மூலோபாயத்தில் இந்தியா ஒரு முக்கியப் பாத்திரமாக உருவெடுத்துள்ளது," என்று சி.என்.என் செய்தி கூறுகிறது. இந்தியா சமீபகாலமாக மக்கள் தொகையில் சீனாவை பின்னுக்குத் தள்ளியுள்ளது. இந்தியாவையும் உடன் சேர்த்துக்கொள்ளாமல், காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய பிரச்னைக்குத் தீர்வு காண்பது கடினம் என்று பைடன் கருதுவதாகவும் அந்தச் செய்தி சொல்கிறது.

### பாஜகவின் தீவிர பதிலடி

பிப்ரவரியில், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பவன் கெடா, பிரதமர் மோடி குறித்து கருத்து தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்குப் பிறகு, அசாம் போலீசார் பவன் கெடாவை டெல்லி விமான நிலையத்தில் இருந்து காவலில் எடுத்தனர். அப்போது காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக பவன் கெடா விமானம் மூலம் சத்தீஸ்கர் சென்றுகொண்டிருந்தார்.

இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ் கடும் எதிர்ப்பு தெரி



வித்தது. இந்தச் சம்பவத்தைக் கேலி செய்து, செய்தியாளர் ரோகினி சிங் "கவுஹாத்தியில் உணர்வுகளைப் புண்படுத்தியதாகக் கூறி ஒபாமா மீது எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டதா? ஒபாமாவை விமானத்தில் இருந்து இறக்கிவிட்டுக் கைது செய்வதற்காக அசாம் காவல்துறை வாஷிங்டனுக்கு சென்றுகொண்டிருக்கிறதா?" என்று ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இந்த ட்வீட்டுக்கு பதிலளித்த அசாம் முதல்வர், "இந்தியாவில் இன்னும் பல ஹூசேன் ஒபாமாக்கள் உள்ளனர். அசாம் காவல்துறை அதற்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்துள்ளது. அதன்படி செயல்படும்," என்று பதிவிட்டிருந்தார்.

ஹிமந்த பிஸ்வா சர்மாவின் இந்த ட்வீட்டுக்கு பிறகு, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இருந்து கடுமையான எதிர்வினைகள் வந்தன.

ஒருபுறம் பிரதமர் மோடி அமெரிக்காவில் உள்ள சிறுபான்மையினரின் ஜனநாயக விழுமியங்கள், நலன்கள் பற்றிப் பேசுகிறார். மறுபுறம் அவரது சொந்தக் கட்சியின் முதல்வர் முஸ்லிம் அடையாளத்தைக் குறி வைத்து ட்வீட் செய்கிறார் என்று விமர்சகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

பிரதமர் அமெரிக்காவில் பேசுகையில், "இந்தியாவின் ஜனநாயக விழுமியங்களில் மதம், சாதி, வயது, பிராந்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்தப் பாகுபாடும் இல்லை. ஜனநாயகத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் அடிப்படையில் நமது அரசு செயல்பட்டால், 'சார்பு என்ற கேள்வியே எழாது," என்று கூறினார்.

பிரதமர் மோதிக்கும் பராக் ஒபாமாவுக்கும் இடையிலான உறவு ஏற்கெனவே விவாதத்திற்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2019ஆம் ஆண்டு நடிகர் அக்ஷய் குமாருக்கு அளித்த பேட்டியில், பிரதமர் மோடி, "பராக் ஒபாமா எனது நல்ல நண்பர்" என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், 2015ஆம் ஆண்டு குடியரசு தின விழாவுக்கு சிறப்பு விருந்தினராக பராக் ஒபாமா அதிபராக இந்தியா வந்தபோது, "ஒவ்வொருவருக்கும் அவரவர் மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. எந்த மதத்தின் மீதும் பாகுபாடு காட்டக்கூடாது. என் பின்னணி காரணமாக நானும் அமெரிக்காவில் அத்தகைய சில விஷயங்களைச் சந்திக்க நேர்ந்தது," என்று கூறியிருந்தார்.

ஈழநாடு



# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு மந்திர மருந்து அல்ல



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இலங்கையில் நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான சர்வதேச சமூகத்தின் தேடல் தொடருகின்றது என்பதற்கு போதுமான சான்றாகும்.

"மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களில் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய அம்சங்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருப்பது கவலைக்குரியதாக இருக்கின்ற போதிலும், அது களத்தில் உள்ள எமது அமைப்புக்களுடன் தொடர்ச்சியாக ஊடாட்டங்களைச் செய்திருக்கிறது. கடந்த தசாப்தத்தில் குறிப்பிட்ட ஆணையுடன் செயற்படும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை நான் ஊக்கப்படுத்துகிறேன்" என்று வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் ரேக் குறிப்பிட்டிருக்கிறார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பாராளுமன்றத்தினால் தெரிவு செயய்பட்டதனால் ஏற்பட்ட மாற்றம் இலங்கை அரசாங்கத்திடம் சர்வதேச சமூகம் முன்வைத்த கோரிக்கைகளிலும் எதிர்பார்ப்புகளிலும் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை.

ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு சமாந்தரமாக இலங்கையில் மனிதப்புதை குழிகள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பில் ஐந்து முன்னணி சிவில் சமூக அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட கடந்த கால விசாரணைகளின் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

"மூன்று தசாப்தங்களுக்கும் இருபது மனிதப்புதைகுழிகள் தோண்டும் முயற்சிகளுக்கும் பிறகு சில சடலங்களே இதுவரையில் அடையாளம் காணப்பட்டு குடும்பங்களிடம் திருப்பிக் கையளிக்கப்பட்டன. நாடு பூராவும் ஆழமற்ற புதைகுழிகளில் ஆயிரக்கணக்கான சடலங்கள் கிடக்கின்றன என்பது எம்மெல்லோருக்கும் தெரியும். அதனால் விசாரணைகளில் போதிய முன்னேற்றம் ஏற்படாத இந்த நிலைமையை துரதிர்ஷ்டம் என்று எம்மால் வர்ணிக்கமுடியாது. அரசியல் துணிவாற்றலோ விருப்போ இல்லை என்பதே தெளிவானது " என்று "காணாமல் போனோர் குடும்பங்கள்" என்ற அமைப்பின் தாபகரான சிவில் சமூக செயற்பாட்டாளர் பிரிட்டோ பெர்னாண்டோ கூறினார்.

அந்த அறிக்கை வெளியிடப்பட்ட நிகழ்வுக்கு ஊடகங்கள் கொடுத்த பெரும் முக்கியத்துவம் போரின் போதும் ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) கிளர்ச்சிகளின்போதும் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்கள் அனுபவித்த வேதனையையும் அவலத்தையும் பிரதிபலிக்கிறது.

சர்ச்சைக்குரிய மனித உரிமை மீறல்கள் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் ஊடகங்கள் காட்டுகின்ற ஆர்வம் போரின் முடிவுக்கு பின்னரான கால கட்டத்தின் மிகவும் நேர்மறையான அம்சங்களில் ஒன்றாகும்.

"த ஐலண்ட்" பத்திரிகை காணாமல் போனோர் தொடர்பிலான அறிக்கை வெளியீட்டு நிகழ்வு பற்றிய செய்திக்கு முன்பக்க முக்கியத்துவம் கொடுத்திருப்பது மாத்திரமல்ல, இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சுமத்தப்பட்ட இனப்படுகொலை குற்றச்சாட்டு தொடர்பில் கனடா அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கொழும்பில் உள்ள அந்நாட்டு தூதரகத்திடம் விளக்கத்தையும் கேட்டிருந்தது.

மே 18 ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவு தினமாக அனுஷ்டிப்பதற்கான தீர்மானத்தை 2022 மே 18 கனடா பாராளுமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியது என்று அந்நாட்டு பிரதமர் ஜஸ்ரின் ரூடோ குறிப்பிட்டிருந்தார்.

முதலாவது தமிழர் இனப்படுகொலை நினைவு தினத்தை முன்னிட்டு பிரதமர் தெரிவித்த கூற்று கனடாவின் நிலைப்பாட்டையும் இலங்கை மோதலில் பாதிக்கப்பட்டவர்கள், உயிர்தப்பி வாழ்பவர்கள் மற்றும் தொடர்ந்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவரும் சகல இலங்கையர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை கனடா நிறுத்தப்போவதில்லை என்பதையும் பிரதிபலிக்கிறது என்று அந்நாட்டு உயர்ஸ்தானிகரகம் வலியுறுத்திக் கூறியது.

### மிகவும் கடினமான பணி

அரசியலமைப்பு வரையறைக்குள் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் நோக்கிய நீண்டகால அடிப்படையிலான நடவடிக்கைகள் மீது தொடர்ந்து கவனத்தை செலுத்துவதே தனது நிலைப்பாடாக இருந்துவருவதாக கூறும் அரசாங்கம் தேசிய இறைமையை பாதிக்கக்கூடிய சர்வதேச பொறிமுறைகளை எதிர்க்கிறது.

போர் இராணுவ ரீதியாக முடிவுக்கு கொண்டுவரப்பட்ட 2009 ஆம் ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான முதல் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து இலங்கை அரசாங்கங்கள் தீர்மானங்களை தோற்கடிப்பதற்கே முயற்சிகளை முன்னெடுத்தன. ஜெனீவாவில் தூதுக்குழுவுக்கு அன்றைய தூதுவர் கலாநிதி தயான் ஜெயதிலக தலைமை தாங்கியபோதே முதற்தடவையாக தீர்மானத்தை தோற்கடிப்பதில் இலங்கை வெற்றி கண்டது.

ஆனால், வழங்கிய உறுதிமொழிகளை (கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகள் உட்பட) ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதை அடுத்தே தொடர்ச்சியாக மேலும் பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு இலங்கைக்கு எதிராக அலை திரும்பியது.

2015 ஆம் ஆண்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் புதிய தீர்மானம் ஒன்றுக்கு இணை அனுசரணை வழங்குவதற்கு இணங்கியபோது மாத்திரமே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் விவகாரத்தில் சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்பதில் இலங்கை ஆர்வம் காட்டியது. பாதுகாப்பு படைகளின் அதிகாரிகளை நுணுகி ஆராய்வது, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பாதுகாப்பு படைகளில் இருந்த நீக்குவது, பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை ஆராய சர்வதேச பங்கேற்புடன் கூடிய விசேட நீதிமன்றங்களை அமைப்பது என்று பல்வேறு விதப்புரைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

அந்த காலப்பகுதியில் காணிகளை திருப்பிக்கொடுத்தல், குடிமக்கள் வாழ்வில் இராணுவத்தின் ஈடுபாட்டைக் குறைத்தல் போன்ற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சிகைளைக் கையாள சில முயற்சிகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அரசாங்கம் அமைத்த காணாமல் போனோர் விவகார அலுவலகம் போன்ற நிறுவனங்கள் அவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை காரணமாக விரைவாகவே நம்பகத்தன்மையை இழந்தன.

கடந்த காலத்தை விசாரணை செய்வதற்கு அரசாங்க முறைமைக்குள் இருந்தும் பொதுவில் பரந்தளவு சமூகத்திடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பியது. அவை போரை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் பேணிப்பாதுகாப்பதற்கு அவசியமான சேவையை பாதுகாப்பு படைகள் செய்ததாக நோக்கின. தொடர்ந்து நோக்குகின்றன.

ஸ்பெயின் நாட்டின் சர்வாதிகார யுகத்தின் காயங்களை குணப்படுத்தும் செயன்முறையின் ஒரு அங்கமாக பாஸ்க் பிராந்தியத்தின் ஒர்டுனா நகரில் ஆழமற்ற புதைகுழிகளில் இருந்து 53 சடலங்களை ஸ்பெயின் தொண்டர்களும் தடயவியல் தொல்லியலாளர்களும் தோண்டியெடுத்ததாக சில மாதங்களுக்கு முன்னர் சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. 1936 -- 1939 ஸ்பெயின் உள்நாட்டுப் போரின்போது ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டார்கள். ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போனதாகவும் வரலாற்றாசிரியர்கள் மதிப்படுகிறார்கள். இவர்களில் பலர் அடையாளமிடப்படாத குழிகளில் புதைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

சர்வாதிகார ஆட்சியின் குற்றங்கள் பற்றிய உண்மையைக் கண்டறியும் பரந்தளவிலான முயற்சியின் ஒரு அங்கமாக அந்த புதைகுழிகளில் இருந்து சடலங்களை தோண்டியெடுப்பதற்கு 80 வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு பின்னர் 2020 ஆண்டிலேயே நிதியை வழங்குவதற்கான சட்டத்தை அரசாங்கம் கொண்டவந்தது. முன்னாள் ஜனாதிபதி பிரான்சிஸ்கோ பிராங்கோவின் மரணத்துக்கு பிறகு நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட காயங்கள் குணப்படுத்தப் படவில்லை. பாஸ்க் பிரிவினைவாதத்துக்கு வழிவகுத்த உள்நாட்டுப்போரின் காயங்கள் மற்றும் பிளவுகளை இன்றுவரை ஸ்பெயின் கொண்டிருக்கிறது.

### மந்திர மருந்து

நீதியும் பொறுப்புக்கூறலுமே எந்தவொரு சமுதாயத்தையும் பிணைக்கின்ற காரணிகளாகும். தாங்கள் அரசாங்கத்தினால் நேர்மையாக நடத்தப்படுவதாகவும் அவ்வாறு நேர்மையாக நடத்தப்படாவிட்டால் நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் மக்கள் உணரக்கூடியதாக இருக்கவேண்டும்.

சர்வதேச சமூகம் உயர்ந்த மட்டங்களில் அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் அடைந்த மேற்குலக நாடுகளின் தலைமையில் இருக்கிறது. மேற்குலக நாடுகள் அவற்றின் நலன்களுக்காக செயற்படுகின்ற சமுதாயங்களை உருவாக்கியிருக்கின்றன. இலங்கை அபிவிருத்தி, நீதி மற்றும் சுபீட்சத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அந்த நாடுகள் விதிக்கின்ற வழிகாட்டல்களை நாம் பின்பற்றவேண்டியிருக்கிறது.

மனித உரிமைகளுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் நடா அல் - நஷீவ் ஜூன் 21 தனது வாய்மூல அறிக்கையில், 'உண்மை, பரிகாரம், நினைவுகூரல், பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களை இணைக்கக் கூடியதும் வெற்றிகரமானதும் நிலைபேறானதுமான நிலைமாறுகால நீதிச் செயன்முறையொன்றுக்கான சூழலை சாத்தியமாக்கக்கூடியதுமான ஒரு கட்டுறுதியான திட்டமே இன்று தேவைப்படுகிறது" என்று கூறியிருக்கிறார்.

சர்வதேச சமூகத்திடமிருந்து வருகின்ற இந்த நெருக்குதல்களுக்கு அரசாங்கத்தின் பதில் காணாமல் போனோர் விவகார அலுவலகம் போன்ற ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பொறிமுறைகளுக்கு புத்துயிரளித்து வலுப்படுத்துவதாக இருக்கவேண்டும். காணாமல் போனோர் விவகார அலுவலகம் புதிய தலைமைத்துவத்தின் கீழ் அதன் ஆற்றலை சர்வதேச சமூகத்தினதும் சிவில் சமூக அமைப்புக்களினதும் ஆதரவுடன் கட்டியழுப்புகின்றது. அதேவேளை காணாமல் போனோரினதும் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களினதும் குடும்பங்களுக்கு நிதி மற்றும் இழப்பீடுகளை வழங்குவதில் இழப்பீட்டு அலுவலகத்தின் வகிபாகத்தை அதிகரிக்கும் முயற்சிகளையும் முன்னெடுக்கவேண்டும்.

ஆனால் அரசாங்கத்திடம் இருக்கும் பிரதான சாதனம் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்றே தோன்றுகிறது. இந்த ஆணைக்குழு தொடர்பான வரைவு அடுத்த மாதம் இராஜதந்திர சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளப்படவிருக்கிறது. அந்த வரைவு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதும் 2023 டிசம்பர் மட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

உண்மை மற்றம் நல்லிணக்க ஆணைக்குழு பொறுப்புக்கூறல் பிரச்சினைக்கு தீர்வைத் தரப்போவதில்லை என்பது வரைவை பார்வையிட்ட தமிழ்த் தலைவர்களின் அபிப்பிராயமாக இருக்கிறது. குற்றங்களைச் செய்தவர்களை பொறுப்புக்கூற வைப்பதாக வரைவு இல்லை. அரசாங்கத்துக்கு தலைமை தாங்குகிறவர்கள் கடந்தகால கிளர்ச்சிகளை ஒடுக்குவதில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் முக்கிய பங்கு வகித்தவர்களாக இருப்பதால் இந்த நேரத்தில் அந்த மட்டத்தில் பொறுப்புக்கூறலை எதிர்பார்க்கமுடியாது.

அரசாங்க தலைவர்கள் தங்கள் மீது தாங்களே குற்றச்சாட்டுகளை சுமத்துவார்கள் அல்லது அத்தகைய குற்றஞ்சுமத்தலுக்கும் வழக்கு தொடுத்தலுக்கும் வழிவகுப்பார்கள் என்று எதிர்பார்ப்பது பொருத்தமானதல்ல. பாதுகாப்பு படைகளை இலக்கு வைக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையும் பெருமளவுக்கு கடந்த 80 வருடங்களுக்கும் மேலாக ஸ்பெயினில் நிலைத்திருப்பதைப் போன்ற பிளவு சமூகத்தில் ஏற்படுவதற்கும் அரசாங்க தலைமைத்துவத்துக்கு எதிராக மக்கள் வாக்களிக்கவும் வழிவகுக்கும்.

2019 ஆண்டில் உண்மையில் நடந்தது அதுவே. இணை அனுசரணையுடனான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிராகரிக்கவேண்டும் என்பதை தனது நிலைப்பாடாக அறிவித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சிங்களப் பெரும்பான்மையின வாக்குகளினால் அதிகாரத்துக்கு வந்தார்.

தற்போதைய தருணத்தில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றின் வகிபாகத்தை மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன என்ற உண்மையை தற்போதைக்கு உறுதிப்படுத்திக் கொண்டு, சர்வதேச கவனத்தை பெற்றுவரும் இனப்படுகொலை குற்ச்சாட்டை காலப்போக்கில் கையாளலாம்.

கடந்த கால தவறுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யுமுகமாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கடந்த காலத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டிய பெரிய தேவை இருக்கிறது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பிரச்சினைகளுக்கு சுலபமாகவும் துரிதமாகவும் தீர்வைத் தரவல்ல ஒரு மந்திர மருந்தாக இருக்கப்போவதில்லை் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு பதில்களைத் தரப்போவதுமில்லை. அந்த தீர்மானங்களை மாற்றத்துக்கான ஒரு செயன்முறையில் வேறு பல வழிகளில் கையாளவேண்டியது அவசியமாகும். அந்த செயன்முறைகளை முன்னெடுக்கும்போது நேர்மை வெளிக்காட்டப்பட வேண்டும்.

The Ceylon Chamber of Commerce

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும்!

## இலங்கை வர்த்தக சம்மேளனம்

கொழும்பு, ஜூன் 28

இலங்கையின் உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அரசியல் தலைவர்களும் பொதுமக்களும் ஆதரவளிக்க வேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் தொடர்புபட்ட அனைத்து பங்குதாரர்களும் பொறுப்புணர்வுடன் செயல்படவேண்டும், உத்தேச கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் இறுதிவடிவத்துக்காக காத்திருக்கவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது ஒட்டுமொத்த கடன் பேண்தகு நிகழ்சிநிரலை நோக்கிய ஒரு முக்கியமான நடவடிக்கை என குறிப்பிட்டுள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம் இதனுடன் தொடர்புபட்ட ஏனைய முக்கிய சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கும் இது முக்கியம் எனவும் தெரிவித்துள்ளது.

நிதி அமைப்பின் ஸ்திரதன்மையை பேணுவதற்கே முன்னுரிமை வழங்கப்படும் வங்கிகளில் பணத்தை வைப்புச் செய்தவர்கள் மோசமாக பாதிக்கப்படாமலிருப்பதும் உறுதி செய்யப்படும் எனவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டு கடன்மறுசீரமைப்பை முன்னெடுக்கப்போவதாக அறிவித்த பின்னர் பல கடும் கரிசனைகள் வெளியாகியுள்ளன. இந்த கரிசனைகளை நாங்கள் புரிந்துகொள்கின்றோம். வெளிப்படையான கலந்துரையாடல்களுக்கான உரிமைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என தெரிவித்துள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம் எனவும் தெரிவித்துள்ளது. (ஐ)

அஸ்வெசும பட்டியல் தொடர்பில்

# மேன்முறையீடு செய்தோரின் விண்ணப்பங்கள் பரிசீலனை

அம்பாறை, ஜூன் 28

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் நலன்புரி நன்மைகள் சபையின் பெயர்ப் பட்டியலில் பெயர் இடம்பெறாத மக்களின் மேன் முறையீட்டு விண்ணபங்களை

ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான மீள்பரிசீலனைகள் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசினால் கடந்த வாரம் வெளியீடப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவுகள் வழங்கும் பெயர்ப் பட்டியலில் தமது பெயர்கள் இடம்பெறாது

அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு வருகை தந்திருந்த மக்கள் அதற்கான காரணங்களை பிரதேச செயலாளரிடம் கோரி இருந்தனர்.



இது தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் திருக்கோவில் பிரதேச செயலாளர் எடுத்துரைத்திருந்த நிலையில், மேன் முறையீட்டு விண்ணப்பங்களை பலரும் சமர்ப்பித்து வருகின்றனர்.

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அனோஜா உஷாந் நேரடி கண்காணிப்பில், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்று, ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் தனித் தனியாக அமைக்கப்பட்டு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான மேன்முறையீட்ட விண்ணப்பங்களை பரிசீலிக்கும் வேலைத் திட்டமானது தொடர்ந்து எதிர்வரும் 30ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. (அ)

# மாவடியில் இன்று மகாகும்பாபிஷேகம்!

காரைதீவு, ஜூன் 28

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்த சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

முதல் நிகழ்வான எண்ணெய்க்காப்பு சாத்தும்கிரியை நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

காலையில் இருந்தே பெருந்திரளான பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவதற்காக நீண்ட வரிசையில் நின்றனர்.

கடந்த சனிக்கிழமை விசேட கர்மாரம்ப கிரியைகளுடன் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமானது.

இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபைச் செயலாளர் சின்னத்தம்பி சிவகுமார் தெரிவித்தார்.

(அ)






# மகாவலித்திட்ட பகுதி மண் அகழ்வு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்!

## சிங்களத்தில் பேசி எச்சரித்தார் பிள்ளையான்

மட்டக்களப்பு, ஜூன் 28

**தமிழ் மக்களின் காணிகளைச் சிங்களவர்கள் அபகரித்ததால் நான் விடுதலைப் புலிகளில் இருந்து யுத்தம் செய்தேன். பின்னர் நான் அரசியலுக்கு வந்தேன். எனவே மகாவலித் திட்ட பகுதியில் மண் அகழ்வு மற்றும் சில விடயங்களை நிறுத்த வேண்டும் என்று பிள்ளை யான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் சிங்கள மொழியில் பேசி எச்சரிக்கை விடுத்தார்.**

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையில் மகாவலி மற்றும் மேச்சல்தரை தொடர்பான விசேடக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரும் மாவட்ட அபிபிருத்திக்குழுத் தலைவருமான இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் கருத்து தெரிவிக்கையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒரு பக்கமாக கருத்து தெரிவிக்கின்றனர்.

நான் புலிகள் அமைப்பில் இருந்தவன். எங்கள் காணிகளை



சிங்களவர்கள் அபகரித்ததால் யுத்தம் செய்தோம். நான் முதல் இருந்த நிலையை வைத்து இப்போது கதைக்க முடியாது. பிரயோசனமில்லை. அதனால் தான் நான் அரசியலுக்கு வந்தேன்.

எங்கள் மக்களை ஒரு பக்கம் சமப்படுத்தவேண்டும். மறுபக்கம் அரசாங்கத்தை சமப்படுத்த வேண்டும். அதற்காக இரு பக்கமும் ஒன்றிணைந்து விசேடமாக ஜனாதிபதியுடன் பேசி நாட்டின் சட்டங்களை மாற்றவேண்டும். அதனை மாற்றுவதற்கு வேலை செய்யவேண் டும். இல்லாவிடில் வேலை யில்லை.

நான் சண்டை பிடிக்க வரவில்லை. கிழக்கில் யுத்தம் முடிந்த பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவின் பண உதவியுடன் ஆடைத்தொழில்சாலை மற்று பால்உற்பத்திப் பண்ணைக்கு இடம் கொடுக்கப் பட்டது.

மகாவலித் திட்டப் பகுதியில் மண் அகழ்கின்றனர். இதை யார் அகழ்கின்றார்கள்? எனவே இவ்வாறன சில விடயங்களை நிறுத்துமாறு உங்கள் அமைச்சருக்கு, உங்கள் பணிப்பாளருக்கு தெரிவியுங்கள்-என்றார். (அ)




# போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூன் 28

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படும் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறீரீகாந்த் மேற்பார்வையில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழிப்புணர்வு நிகழ்வு உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்பாக ஆரம்பமானது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட இவ்விழிப்புணர்வு நிகழ்வில் போதைப்பொருள் புனர்வாழ்வு மையத்தின் இராணுவ அதிகாரியும் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

இதன்போது போதைப்பொருள் பாவனையின் விபரீதங்கள், சிறுவர்களுக்கு விழிப்பூட்டும் கருத்தம்சங்கள் கொண்ட பதாகைகள் இதன்போது மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப் பட்டன. (அ)

# கைதாவோரின் அடிப்படை உரிமைகளை பொலிஸார் நிச்சயம் பாதுகாக்கவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை இணைப்பாளர் அப்துல் அஸீஸ்



அம்பாறை, ஜூன் 28

எமது நாட்டில் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டு செல்லும் அத்தியவசியப் பொருட்களின் விலையேற்றம் குடும்பத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. குடும்பச் சுமைகளை சுமக்கின்ற தாய்மார்கள் வேலைக்குச் செல்லும்போது ஏற்படும் விபரீதங்கள் பற்றியும் சமூகத்தில் உள்ளவர்களின் வறுமை, கல்வியறிவின்மை போன்ற காரணங்களினாலும் நாளுக்கு நாள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் புலனாய்வுகளின்போது சந்தேக நபர்களை சித்திரவதைக்குள்ளாக்காமலும் இழிவான நடத்துகைக்குள்ளாக்காமலும் பொலிஸார் அடிப்படை உரிமையை பாதுகாக்கவேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச சித்திரவதைக்கு எதிரான தினத்தையொட்டி கல்முனை பிராந்தியத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கான செயலமர்வு கல்முனை பொலிஸ் தலைமை நிலையத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம் பெற்றது.

கல்முனை பிராந்திய நிலையத்திற்குட்பட்ட ஐந்து பொலிஸ் நிலையங்களிலுள்ள உயர் அதிகாரிகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அங்கு இணைப்பாளர் அஸீஸ் மேலும் தெரிவிக்கையில்-

1994 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடுரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கு எதிரான சமவாய சட்டம் ஒன்றை இலங்கை அரசு உள்வாங்கி அதனை 20.12.1994 இல் அத்தாட்சிப்படுத்தியது.

சிறுவர் பாலியல் தொந்தரவுகள், பாலியல் பலாத்காரங்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டாலும் அவைகளில் சில நீதிமன்றம்வரை கொண்டு செல்லப்படாமல் சமாதானப்படுத்தப்பட்டு வருகின்றமை கவலைக்குரியது. இதனால் தப்புச் செய்கின்றவர்கள் இலகுவில் தப்பித்துக் கொள்கின்றனர். சாட்சிகள் முன்வராமை, சமூகத்தின் ஏளனமான பார்வை, ஆதாரங்கள் அழிக்கப்படல் என்பவைகள் வழக்கொன்றை தொடர்வதற்கு பலமற்ற விடயங்களாக இருக்கின்றன.



எம்மில் அநேகமானவர்களுக்கு பாலியல் தொந்தரவானது இலங்கைச் சட்டத்தில் குற்றம் என எழுதப்பட்டுள்ள விடயம் என்னவென்பது தெரியாது என்றே கூறவேண்டும். 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை சட்டத்தின்படி இக்குற்றம் பற்றி வறையறை செய்யப்பட்டுள்ளது. சித்திரவதைகளைக் கட்டுப்படுத்த பெரும் பங்களிப்பைச் செய்கின்ற இடம்தான் நீதவான் நீதிமன்றம். இங்குதான் ஆரம்ப கட்டத்தில் அதிகமானோர் வருகின்றனர். அதில் சிறு தொகையினரே உயர்நீதிமன்றம் செல்கின்றனர்.

இலங்கை அரசியல் அமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் 11ஆம் உறுப்புரையில் உடல் ரீதியாகவோ உள ரீதியாகவோ, ஒரு மனிதனை சித்திரவதை செய்வது அடிப்படை உரிமை மீறல். எனவும், ஒருவரை தொல்லைக்கு உட்படுத்துவது துன்புறுத்தும் செயலாகவும் சட்டம் கருதுகிறது. ஒரு பிள்ளையை சொற்களின் மூலமாக அல்லது வேறொரு விதத்தில் பாலியல் இம்சைக்குள்ளாக்குதல் குற்றம் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளது-என்றார். (அ)

# அரச உத்தியோகத்தர்களின் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தத் திட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு மாவட்ட அரச உத்தியோகத்தர்களின் உடல், உள ஆரோக்கியத்தினை மேம்படுத்த விசேட வேலைத் திட்டம் ஒன்றை மாவட்ட செயலகம் மேற்கொண்டுள்ளது.

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் தொற்றா நோய் மற்றும் மன அழுத்தங்களை தவிர்க்கும் தூரநோக்கில் எரோபிக் நடனத்துடனான உடற்பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை வழிகாட்டலின்கீழ், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறீகாந்தின் நேரடிக் கண்காணிப்பில் இப்பயிற்சி நெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் சிறுவர் மற்றும் மகளிர் உளவள உதவியாளர் திருமதி என். ஜனார்த்தனியின் ஒருங்கிணைப்பில் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்திற்கான பயிற்சி வகுப்பு கடந்த 16 ஆம் திகதியும், கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி கடந்த 22 ஆம் திகதியும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

எரோபிக் நடனத்துடனான உடற்பயிறச்சி மற்றும் விழிப்புணர்வு செயலமர்வுகள்யாவும் எரோபிக் பயிற்றுவிப்பாளரும், கராத்தே பயிற்றுவிப்பாளருமான திருமதி ஆர். முருகேந்தினால் நடத்தப்பட்டு வருகின்றன.

# கனடா காட்டுத் தீ புகை மண்டலம் பிரான்ஸின் வான் பரப்புக்கு வந்தது!

## பாரிஸ் உட்பட நாடெங்கும் இந்த வாரம் வளி மாசுபாடு



பாரிஸ், ஜூன் 28
கனடாவில் கட்டுக்கடங்கா மல் பரவி எரிகின்ற பெரும் காட்டுத் தீயினால் உருவான நுண்துகள் புகை மண்டலம் பல்லாயிரக்கணக்கான மைல் கள் தூரம் தாண்டி-அத்திலாந் திக் கடலைக் கடந்து-ஐரோப் பாவின் வான் பரப்பை வந்தடை யத் தொடங்கியுள்ளது.

அயர்லாந்து, இங்கிலாந்து நாடுகளைக் கடந்து பிரான்ஸின் வான்பரப்பினுள் பிரவேசித்துள்ள மாசுப் புகை நாட்டின் பெரும் பகுதி வான் மண்டலத்தில் குறிப்பாக பாரிஸ் பிராந்திய வான் பரப்பில் இன்று திங்கட் கிழமை இரவு முதல் பரந்து படர்ந்து காணப்படும் என்றும்- அது பெரும்பாலும் எதிர்வரும் வியாழன்-வெள்ளிக்கிழமைக ளில் வளியில் தீவிரமான மாசு பாட்டை உருவாக்கும் என்றும் - வளிமண்டல அவதான நிலை யத்தின் நிபுணர்கள் தெரிவித்தி ருக்கின்றனர்.

ஐரோப்பிய கோப்பர்நிக்கஸ் வளிமண்டல சேவை நிறுவன மும் காட்டுத் தீ மாசுப் புகை ஐரோப்பிய வான்மண்டலத்தி னுள் பிரவேசிப்பதை உறுதிப்ப டுத்தி உள்ளது. இந்தப் புகையை வானில் வெற்றுக் கண்களால் காண முடியாது.

காட்டுத் தீயின் மாசுப் புகை காற்றில் கலப்பதால் சுவாசப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள் ளது என்று மருத்துவ நிபுணர் கள் விளக்கமளித்துள்ளனர்.

குறிப்பாக ஆஸ்மா (முட்டு) போன்ற சுவாச நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள் மேலும் அவதிப் பட நேரிடலாம்.

இந்த ஆண்டு கனடாவின் மேற்குப் பகுதிகள் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு மிக மோசமான காட்டுத்தீ அனர்த் தத்தைச் சந்தித்துள்ளன. கடந்த ஜனவரி முதல் அங்கு 7.4 மில்லி யன் ஹெக்ரேயர் பிரதேசம் காட் டுத் தீயில் நாசமாகியுள்ளது.

கனடா இன்ரஏஜென்ஸி காட்டுத் தீ நிலையத்தின் தகவ லின் படி, 470 இடங்களில் காட் டுத் தீ பரவியுள்ளது. அதில் 247 தீப் பகுதிகள் கட்டுப்பாட்டை மீறி எரிந்துகொண்டிருக்கின் றன. தலைநகர் மொன்றியல் உலகில் மிக மோசமாக வளி மாசடைந்த நகரம் என்ற இடத் தில் இருக்கிறது.

கனடாவில் இருந்து பரவிய காட்டுத் தீப்புகை நியூயோர்க் உட்பட அமெரிக்க நகரங்களி லும் பெரும் சூழல் மாசடைவை ஏற்படுத்தி உள்ளது.

(அ)

# விளையாட்டு அரங்கில் திடீர் துப்பாக்கிச் சூடு!

## ஹொண்டூரஸில் 11 பேர் பலி!!

நியூயோர்க், ஜூன் 28
மத்திய அமெரிக்காவில் உள்ள நாடு ஹொண்டூரஸ். இந்நாட்டின் வடக்கு பகுதியில் சொழுமா என்ற நகரம் உள்ளது.

இந்த நகரில் பில்லியர்ட் விளையாட்டு அரங்கில் நேற்று முன் தினம் இரவு சிலர் விளை யாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த விளை யாட்டு அரங்குக்குள் நுழைந்த துப்பாக்கி ஏந்திய நபர் அங்கி ருந்தவர்கள் மீது சரமாரியாக சூடு நடத்தியுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டால் அதிர்ச்சியடைந்த மக்கள் விளை யாட்டு அரங்கில் இருந்து தப்பி யோட முயற்சித்தனர்.

ஆனால், அந்த நபர்தொடர்ந்து நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்து துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டை தொடர்ந்து தாக்குதல் நடந்த பகுதியில் ஊரடங்கு பிறப்பித்து அந்நாட்டு ஜனாதிபதி ஜரிஷ் ஜியோமாரா கெஸ்ட்ரோ செமி யிண்டொ உத்தவிட்டுள்ளார்.

(அ)



# ரஷ்யாவில் ஆட்சியை கவிழ்ப்பது நோக்கமல்ல

## வோக்னர் தலைவர் ப்ரிகோஜின்



மொஸ்கோ, ஜூன் 28
ரஷ்யாவின் சட்டபூர்வ அர சாங்கத்தைக் கவிழ்ப்பது எங்கள் நோக்கமல்ல. இராணுவத் தலை மைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவே மொஸ்கோ நோக்கி அணிவ குத்து சென்றோம் என வோக்னர் கூலிப்படையின் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஜின் தெரி வித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை உலகையே உலுக்கியே வோக்னர் கூலிப்ப டையின் கிளர்ச்சியின் பின்னர் நேற்று முன்தினம் ப்ரிகோஜின் முதல்முதலாக பகிரங்கமாக பேசியுள்ளார்.

தனது கிளர்ச்சியானது சிக் கியிருந்த கூலிப்படையைக் காப் பாற்றுவதை நோக்கமாகக் கொண்டது என்றும் ரஷ்ய தலைமையைக் கவிழ்க்க அல்ல என்றும் அவர் கூறினார்.

"நாங்கள் எங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தச் சென்றோம், நாட்டில் அதிகாரத்தைக் கவிழ்க்க அல்ல" என்று ப்ரிகோ ஜின் கூறினார்.

மொஸ்கோவை நோக்கிய அணிவகுப்பு ரஷ்யாவில் "மிக வும் தீவிரமான பாதுகாப்பு பிரச்னைகளை" காட்டியதாக வோக்னர் கூலிப்படை குழுவின் தலைவர் கூறினார்.

அவர் வெளியிடப்பட்ட ஓடியோ செய்தியில், தனது ஆயுதமேந்திய துருப்புக்களின் தொடரணி மொஸ்கோ விலிருந்து 200 கிலோமீற்றர் (125 மைல்கள்) தொலைவில் இருப்பதாகவும், அதன் பாதை யில் உள்ள விமானத் தளங்களை உள்ளடக்கிய அனைத்து இரா ணுவ உள்கட்டமைப்புகளை யும் தடுத்ததாகவும் கூறினார்.

தனது போராளிகள் மொஸ் கோவை நோக்கி முன்னேறும் போது அவர்கள் கடந்து சென்ற நகரங்களில் உள்ள மகிழ்ச்சியான குடிமக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றதாகவும் கூறினார்.

ரஷ்ய நகரங்களில், பொது மக்கள் ரஷ்ய கொடிகள் மற்றும் வோக்னரின் சின்னங்களுடன் எங்களைச் சந்தித்தனர். நாங்கள் கடந்து சென்றபோது அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந் தனர் என்று அவர் குறிப்பிட் டார்.

(அ)

# உள்நாட்டு கிளர்ச்சிகள் தோல்வியிலேயே முடியும்

## மார்தட்டுகிறார் புடின்



மொஸ்கோ, ஜூன் 28
உள்நாட்டு கிளர்ச்சி தோல்வி யில்தான் முடியும் என்று அறி வித்துள்ளார் ரஷ்ய ஜனாதிபதி புடின்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரில் வாக்னர் குழு என்ற தனியார் கூலிப்படையும் இணைந்து செயல்பட்டது. ரஷ்யாவுக்கு எதிரான தனியார் படையின் கிளர்ச்சி 24 மணி நேரத்தில் முடிவுக்கு வந்துவிட் டாலும், ரஷ்யா-உக்ரைன் போரில் அடுத்து என்ன நடக் கும் என்ற கேள்வி எழுந்திருக்கி றது.

இந்த சம்பவம் ஜனாதிபதி புடினுக்கு பின்னடைவாக இருக்கும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வோக்னர் படையின் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டதை அடுத்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறியதாவது: -

ரஷ்யாவில் உள்நாட்டு கிளர்ச்சி உருவானால் தோல்வியில்தான் முடியும். ரஷ்ய ராணுவத்தினர் ஒருவரை ஒருவர் கொல்லவேண் டும் என மேற்கு நாடுகள் விரும் புகின்றன. வோக்னர் படையை வீழ்த்த உறுதுணையாக இருந்த ரஷ்ய மக்களுக்கு நன்றி. வோக் னர் படை ரஷ்ய இராணுவத்தில் இணையலாம் அல்லது பெலா ரஸ் நாட்டுக்கு செல்லலாம்.

ரஷ்யாவில் இரத்தம் சிந்து வதை தவிர்க்க இறங்கிய வாக் னர் கூலிப்படை போராளிகள் மற்றும் தளபதிகளுக்கு நன்றி. வோக்னர் போராளிகள் விரும்பி னால் பெலாரஸ்க்கு இடம் பெயரவோ அல்லது பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவோ அல்லது அவர்களது குடும்பங்களுக்குத் திரும்பவோ அனுமதிக்கப்படுவர் -என்றார்.

(அ)

# ரஷ்யா-உக்ரைன் போரில் அடுத்து என்ன நடக்கும்?

மொஸ்கோ, ஜூன் 28
ரஷ்யாவுக்கு எதிரான தனி யார் படையின் கிளர்ச்சி 24 மணி நேரத்தில் முடிவுக்கு வந்து விட்டாலும், ரஷ்யா-உக்ரைன் போரில் அடுத்து என்ன நடக் கும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த சம்பவம் ஜனாதிபதி புடினுக்கு பின்னடைவாக இருக் கும் என நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தனியார் படையின் கிளர்ச்சி, ரஷ்ய பாதுகாப்பு அமைப்பில் உள்ள குறைபாடுகளை வெளிச் சமிட்டுக்க காட்டியுள்ளதாகவும் அவர்கள் கூறினர். குறிப்பாக, அசைக்க முடியாத அதிகாரமிக்க தலைவராக கருதப்படும் புடி னின் மதிப்புக்கு இது பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. அவருக்கு இது பின்னடைவுதான் என்று அவர்கள் கூறுகின்றனர்.

வல்லரசாக கருதப்படும் ரஷ்யா, ஒரு கூலிப்படையுடன் சமரசம் செய்து கொள்ளவேண் டிய நிலைக்கு இறங்கிவிட்டதாக விமர்சிக்கின்றனர்.

சமரச உடன்பாடு குறித்து பெலாரஸ் ஜனாதிபதி தான் தகவல் தெரிவித்துள்ளார். புடினோ, ப்ரிகோஜினோ, ரஷ்ய இராணுவ உயர் அதிகாரிகளோ இதுவரை வாய் திறக்கவில்லை. இந்நிலையில், நடந்துள்ள சம்ப வம் குறித்து கருத்து தெரிவித் துள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன்,

'இது அசாதாரணமானது. 16 மாதங்களுக்கு முன்பு, உக் ரைன் தலைநகரை எளிதில் கைப் பற்றிவிடுவார் என்று கருதப்பட்ட புடின், இன்று தனது தலைநகரை தற்காத்திட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்' என தெரி வித்துள்ளார்.

இதனிடையே, ரஷ்ய தரப் பில் உள்குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில், உக்ரைன் தனது தாக் குதலை தீவிரப்படுத்தியுள்ளதா கவும் தகவல் வெளியாகியுள் ளது.

(அ)

ஈழநாடு



உலகக் கிண்ணம் தகுதி சுற்று:

# சுப்பர் ஓவரில் மேற்கிந்தியாவை வீழ்த்தியது நெதர்லாந்து அணி!




ஹராரே, ஜூன் 28

நடப்பு ஐ. சி. சி. உலகக் கிண்ணத் தகுதி சுற்றின் லீக் போட்டியில் முன்னாள் உலக சம்பியன் அணியான மேற்கிந்தியத் தீவுகள் அணியை சுப்பர் ஓவரில் வீழ்த்தி அபார வெற்றியை பதிவு செய்துள்ளது நெதர்லாந்து கிரிக்கெட் அணி.

இந்த வெற்றிக்காக அந்த அணியின் சகலதுறை வீரர் வான் பீக், துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

உலகக் கிண்ண தொடருக்கான தகுதி சுற்றில் 10 அணிகள் பங்கேற்று வருகின்றன. இதில் இரு அணிகள் உலகக் கிண்ணத்தின் பிரதான தொடருக்கு தெரிவு செய்யப்படும்.

இதில், நேற்றுமுன்தினம் மேற்கிந்திய தீவுகள், நெதர்லாந்து அணிகள் மோதின. இதில், நாணயச் சுழற்சியில் வென்ற நெதர்லாந்து அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது. 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 374 ஓட்டங்கள் எடுத்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. நிக்கோலஸ் பூரண் 65 பந்துகளில் 104 ஓட்டங்கள் எடுத்தார். அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் கிங் மற்றும் சார்ள்ஸ், அரைச்சதம் பதிவு செய்தனர். அணித்தலைவர் ஷாய் ஹோப், ப்ரூக்ஸ், கீமோ பால் ஆகியோரும் நேர்த்தியாக ஓட்டங்களை குவித்தனர்.

375 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பெரிய இலக்கை நெதர்லாந்து அணி விரட்டியது. தேஜா நிடமானுரு மற்றும் ஸ்காட் எட்வர்ட்ஸ் இணைந்து 5ஆவது விக்கெட்டுக்கு 143 ஓட்டங்களை இணைப் பாட்டமாக பெற்றனர்.

ஸ்கொட் எட்வர்ட்ஸ் 67 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து தேஜாவும் சதம் பதிவு செய்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வான் பீக் 14 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்தார். கடைசி ஓவரில் நெதர்லாந்து அணியின் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அல்சாரி ஜோசப் வீசிய அந்த ஓவரில் இரண்டு விக்கெட்டை இழந்து 8 ஓட்டங்களை எடுத்தது நெதர்லாந்து. இரு அணிகளின் ஓட்டங்களும் 374 என சமன் ஆனதால் சுப்பர் ஓவர் நடத்தப்பட்டது.

நெதர்லாந்து அணிக்காக சுப்பர் ஓவரில் வான் பீக் மற்றும் எட்வார்ட்ஸ் களம் கண்டனர். ஹோல்டர் வீசிய அந்த ஓவரில் 30 ஓட்டங்களை முறையே 4, 6, 4, 6, 6, 4 என எல்லைக்கு விரட்டினார். தொடர்ந்து சுப்பர் ஓவரில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 5 பந்துகளில் 8 ஓட்டங்கள் எடுத்து 2 விக்கெட்களை இழந்தது. இதன் மூலம் நெதர்லாந்து அணி வெற்றி பெற்றது. அந்த ஓவரை வீசியதும் வான் பீக் தான். (ஐ)

## ஆஷஷ் டெஸ்ட் தொடர் இரண்டாவது போட்டி இன்று

லோர்ட்ஸ், ஜூன் 28

5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரில் விளையாடுவதற்காக கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்து சென்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையே பர்மிங்ஹாமில் நடந்த பரபரப்பான முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதையடுத்து இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 2ஆவது ஆஷஷ் டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இன்று புதன்கிழமை தொடங்குகிறது. முதல் டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்கு பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி பதிலடி கொடுக்குமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டுள்ளனர்.

கடந்த தோல்வியில் இருந்து மீண்டு இங்கிலாந்து இந்த டெஸ்டில் வெற்றி பெற கடுமையாக போராடும். இங்கிலாந்து அணியில் ஜோ ரூட், பெயர்ஸ்ரோ, ஜேக் கிராவ்லி, பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்ருவர்ட் பிரொட், றொபின்சன் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி இந்த டெஸ்டிலும் இங்கிலாந்தை வீழ்த்தி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெறும் வேட்கையில் உள்ளது.

தொடக்க வீரர் உஸ்மான் கவாஜா மிகவும் நல்ல நிலையில் இருக்கிறார். அவர் முதல் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் 141 ஓட்டங்களும், 2ஆவது இன்னிங்ஸில் 65 ஓட்டங்களும் குவித்தார்.

இது தவிர ஸ்ரீவன் ஸ்மித், டிராவிஸ் ஹெட், லபுஷேன், அலெக்ஸ் கேரி, கேமரூன் கிரீன், கம்மின்ஸ், ஸ்டார்க், ஹசல்வுட், நதன் லயன் போன்ற சிறந்த வீரர்களும் உள்ளனர்.

இந்த டெஸ்ட் போட்டி இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது. (ஐ)



## வான்வெளியில் உலகக் கிண்ணம்

அகமதாபாத், ஜூன் 28

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) 50 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் ஒக்ரோபர்-நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதில் நடப்பு சம்பியன் இங்கிலாந்து, போட்டியை நடத்தும் இந்தியா உள்ளிட்ட தலைசிறந்த 10 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்நிலையில் இந்தத் தொடருக்கான கிண்ணம் அறிமுக விழாவை வியக்க வைக்கும் வகையில் நடத்தி உள்ளது ஐ. சி. சி.



உலகக் கிண்ணம் பூமியிலிருந்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் அடி உயரத்தில் விண்வெளியில் வைத்து அறிமுகம் செய்துள்ளது ஐ. சி. சி. பெஸ்போக் ஸ்ட்ராடோஸ்பெரிக் பலூனில் இணைக்கப்பட்டு கிண்ணம் அறிமுகம் செய்யப்பட்டது.

தொடர்ந்து அங்கிருந்து, அந்த கிண்ணமானது அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் தரையிறங்கியது. பலூனில் இணைக்கப்பட்ட 4கே கமெராக்கள் இதை பல்வேறு கோணங்களில் படம் எடுத்துள்ளன. இதில் பூமியின் வளிமண்டலத்தின் விளிம்பில் கோப்பை அமர்ந்திருப்பது போன்ற சில காட்சிகள் பிரம்மிக்க வைப்பதாக இருந்தன.

இந்த ஆண்டுக்கான உலகக் கிண்ண சுற்றுப் பயணத்தை பெரியளவில் நடத்த ஐ. சி. சி. முடிவு செய்துள்ளது.




## 304 ஓட்டங்களால் அமெரிக்காவை தோற்கடித்தது சிம்பாப்வே அணி!

ஹராரே, ஜூன் 28

ஐசிசி 50 ஓவர் உலகக் கிண்ணத் தகுதி சுற்றில் அமெரிக்க அணியை 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து சாதனை படைத்தது சிம்பாப்வே அணி. கிரிக்கெட் வரலாற்றில் இது 2ஆவது பெரிய வெற்றியாக அமைந்தது.

ஐ. சி. சி. 50 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி தகுதி சுற்று சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. இதில் 'ஏ' பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் சிம்பாப்வே - அமெரிக்க அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 50 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 408 ஓட்டங்கள் குவித்தது. சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அந்த அணியின் அதிகபட்ச ஓட்டக் குவிப்பாக இது அமைந்தது.

இதற்கு முன்னர் அந்த அணி கடந்த 2009ஆம் ஆண்டு கென்யாவுக்கு எதிராக 7 விக்கெட்கள் இழப்புக்கு 351 ஓட்டங்கள் குவித்திருந்தது.

அமெரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் சீன் வில்லியம்ஸ் 101 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 21 பௌண்ட்ரிகளுடன் 174 ஓட்டங்கள் விளாசினார். ஜோய்லோர்ட் கும்பி 103 பந்துகளில், 5 பௌண்ட்ரிகளுடன் 78 ஓட்டங்களும், சிகந்தர் ரசா 27 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 48 ஓட்டங்களும், ரியான் பர்ல் 16 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 47 ஓட்டங்களும் சேர்த்தனர்.

409 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 25.1 ஓவரில் 104 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. 11 ஓவர்களில் 45 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்த அந்த அணி அதன் பின்னர் மீளவில்லை.

அதிகபட்சமாக அபிஷேக் பிரத்கர் 24, ஜெஸி சிங் 21, கஜானந்த் சிங் 13 ஓட்டங்கள் சேர்த்தனர். மற்ற எந்த துடுப்பாட்ட வீரர்களும் இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டவில்லை. சிம்பாப்வே அணி தரப்பில் ரிச்சர்ட் நகரவா, சிகந்தர் ரசா ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணிக்கு இந்தத் தொடரில் 4ஆவது வெற்றியாக அமைந்தது. அதேவேளையில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மிகப் பெரிய அளவிலான 2ஆவது வெற்றியை பதிவு செய்த அணி என்ற சாதனையையும் சிம்பாப்வே படைத்துள்ளது. இந்த வகை சாதனையில் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. இந்த ஆண்டில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 317 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டிருந்தது.

## ஆஷஷ் மகளிர் டெஸ்ட் அவுஸ்திரேலியா வெற்றி

நாட்டிங்ஹாம், ஜூன் 28

ஆஷஷ் பெண்கள் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியை 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது அவுஸ்திரேலிய அணி.

நாட்டிங்ஹாமில் நடைபெற்று வந்த இந்த டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய மகளிர் அணி 473 ஓட்டங்களும், இங்கிலாந்து அணி 463 ஓட்டங்களும் சேர்த்தன. 10 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலிய அணி 78.5 ஓவர்களில் 257 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

268 ஓட்டங்கள் இலக்குடன் செய்த இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் கடைசி நாள் ஆட்டத்தில் 49 ஓவர்களில் 178 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக டேனி வயாத் 54 ஓட்டங்கள் சேர்த்தார். அவுஸ்தி ரேலிய அணி சார்பில் ஆஷ்லே கார்ட்னர் 8 விக்கெட்களை சாய்த் தார்.




89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி ஒரேயொரு போட்டி கொண்ட ஆஷஷ் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. (ஐ)

# ஜே.வி.பி. அதிகாரத்துக்கு வருவதை தடுக்க அரசிடம் மூன்று தந்திரங்கள்

## சுட்டிக்காட்டுகின்றார் அநுரகுமார

கொழும்பு, ஜுன் 28

**மக்கள் விடுதலை முன்னணி அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்க அரசாங்கம் மூன்று தந்திரங்களைக் கையாள்கிறது. ஏனெனில் கட்சியைச் சுற்றி பெரும் மக்கள் சக்தி ஒன்று திரண்டிருப்பதைக் கண்டு பயந்துவிட்டதாக அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.**



வார இறுதியில் அவுஸ்திரேலியாவின் மெல்பர்னில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் தேர்தலை ஒத்தி வைக்கிறது. அனைத்து அமைப்புகளின் ஆதரவைப் பெற முயற்சிக்கிறது. அத்தகைய அதிகார மாற்றத்தைத் தடுக்க இன மற்றும் மத மோதல்களைத் தூண்ட முயற்சிக்கிறது.

இலங்கையில் உள்ள ஆட்சியாளர்கள் உலகத்துக்கு மக்கள் அம்பலப்படுத்தப்படுவதைக் கண்டு பயப்படுகிறது.

அதனால்தான் அவர்கள் இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களை விமர்சிக்க முயற்சிக்கிறார்கள்.

சமூகத்தின் பரந்த பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் சமூகத்தில் உள்ள ஏனையவர்களைப் போலவே தவறுகளைச் செய்யலாம். அனைவருக்கும் எதிரான சட்டத்தை சமமாக அமுல்படுத்துவதே முக்கியமானது. மக்கள் விடுதலை முன்னணியாளர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்று நான் ஒருபோதும் கூறவில்லை. இது எந்த சமூகத்துக்கும் பொருந்தும். அனைவருக்கும் எதிராக சமமாக சட்டத்தை அமுல்படுத்துவது முக்கியம்-என்றார்.

(அ)

# கல்வி வீசா பெற்று தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்டவர்கள் கைது!

கொழும்பு, ஜுன் 28

கனடாவில் கல்வி வீசா பெற்று தருவதாக கூறி பண மோசடியில் ஈடுப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்துக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்த நிலையில் கோட்டை நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவுக்கமைய நேற்று முன் தினம் கடவத்தை பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வந்த போலி ஆவண நிலையம் சோதனையிடப்பட்டது.

அங்கு 03 கணினிகள், 03 மடிக்கணினிகள், 04 அச்சிடும் கருவிகள், 01 ஸ்கானர், போலி வைப்புச் சான்றிதழ்கள், கணக்கு அறிக்கைகள், தூதரகத்துக்கு அனுப்பத் தயாரிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள், பல்வேறு உத்தியோகபூர்வ முத்திரைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றுடன் ஓர் ஆணும், 5 பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஆண் 68 வயதுடையவர். அவர் சீதுவை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், ஏனைய பெண்கள் வத்தளை, ராகம மற்றும் களனிப் பிரதேசங்களைச் சேர்ந்த 47, 45, 31, 28 மற்றும் 23 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசா கோரி வருபவர்களின் பெயரில் போலியான கடிதத் தலைப்புக்களைப் பயன்படுத்தி பல்வேறு சொத்து விவரங்கள், நிலையான வைப்பு சான்றிதழ்கள், கணக்கு விவரங்கள் ஆகியவற்றை அவர்கள் வழங்கியிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கைக்கு உதவுவதற்கு ‘எக்ஸிம்’ வங்கி இணக்கம்

பீஜிங், ஜுன் 28

இலங்கைக்கான முக்கிய கடன் வழங்குநரான சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (எக்ஸிம்),கடன் நிலைத்தன்மையை அடைவதற்கு இலங்கையின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த உறுதியளித்ததாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ பயணமாக மேற்கொண்டு சீனா சென்றுள்ள அமைச்சர் அலி சப்ரி, சீன எக்ஸிம் வங்கியின் தலைவர் பலினுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

இதன்போது இலங்கையின் பேச்சுவார்த்தையாளர்களுடன் ஆக்கபூர்வமாக செயல்படுவதாகவும், இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கு பங்களிப்பதாகவும் சீன வங்கி உறுதியளித்ததாக சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிநாட்டுக் கடனை செலுத்துவதை இலங்கை இடைநிறுத்தியது.

இதனையடுத்து தற்போது, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கு இணங்க அரசாங்கம் தனது கடன்களை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இதற்கிடையில் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இலங்கையின் 70 கோடி அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைப்பதற்கு இருதரப்பு கடன் வழங்குநர்களிடையே பேச்சு நடத்துவதற்கான பொதுவான தளத்தை உருவாக்கியுள்ளன.

இந்த நிலையில் இலங்கை பெற்ற மொத்த வெளிநாட்டுக் கடன்களில் 10 வீதம் சீனாவில் இருந்து பெறப்பட்ட கடன்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# கிளிநொச்சி சேவைச் சந்தை குறித்து ஆளுநருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

கிளிநொச்சி, ஜுன் 28

கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்களுக்கு நியாயமான தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.



கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர்களிடம் அதிகரித்த இடவாடகைக் கட்டணம் அறவிடப்படுவதாக, வர்த்தகர்களாலும், சேவைச்சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தினராலும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் இராஜபாலன் புவனேஸ்வரன், உபதலைவர் கருப்பையா ஜெயக்குமார், உறுப்பினர் அருளானந்தம் யேசுராஜன் உள்ளிட்டோர் வடக்கு மாகாண ஆளுநரை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, புதிய மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையிலான கட்டண அறவீட்டினால் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அதனைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து, உரிய திணைக்களங்களோடு கலந்துரையாடி கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர்கள் பாதிக்கப்படாத வகையிலான தீர்வைப் பெற்றுத்தருவதாக வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சார்ள்ஸ் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலையின் 200 ஆண்டு பூர்த்தி நிகழ்வு நேற்று ஆரம்பம்

வடமராட்சி, ஜுன். 28

வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையின் 200 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கோலாகலமாக நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின.

முதல் நிகழ்வாக விருந்தினர்கள் பாடசாலை நுழைவாயிலிலிருந்து பாடசாலை மைதானம் வரை மலர் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசை முழங்க வரவேற்கப்பட்டு அங்கு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதல் நிகழ்வாக தேசிய கொடி, பாடசாலை கொடி என்பன முறையே யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராசா, பாடசாலை அதிபர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சைவ, கிறிஸ்தவ இறை வணக்கங்கள் இடம் பெற்றன. தொடர்ந்து வரவேற்பு மற்றும் தலைமை உரையினை கல்லூரி முதல்வர் நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து சிறப்புரையை நிகழ்வின் பிரதம விருந்தினரும் யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமான பேராசிரியர் சிறீ சற்குணராசா நிகழ்தியதை தொடர்ந்து நிகழ்வுகளை சம்பிர்தாயபூர்வமாக துணைவேந்தர் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இதனை தொடர்ந்து மாணவிகள், பழைய மாணவிகள், அதிபர், ஆசிரியர்களின் சைக்கிள் பவனி, வாகன பவனி, நடை பவனி என்பன இடம்பெற்றன.



இதில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சற்குணராஜா, ஹாட்லிக் கல்லூரி அதிபர் கலைச்செல்வன், வடமராட்சி வலய கல்விப் பணிமனை அதிகாரிகள், அயல் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், புலம்பெயர்ந்த மற்றும் உள்ளூர் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் நலன் விரும்பிகள் என ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (அ-02)

## அரசியல்...

தெளிவுபடுத்தினேன்.

"அரசியல் பிரச்னைக்கு தீர்வு காணுதல், அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்காக நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரணியாக வேண்டும். முக்கியமாக தமிழ்க் கட்சிகள் தனித் தனியாக நிற்காமல் ஒன்றிணைந்து எம்முடன் பயணிக்க வேண்டும். இந்த விடயங்களில் அரசியல் கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்க வேண்டாம். இதனால், அரசியல் தீர்வு முயற்சியும் நாட்டின் அபிவிருத்தியுமே கால தாமதமாகும் - என்றும் கூறினார். (ஐ)

## எனக்கு...

எனவும் கூறினார்.

அண்மையில் ஜனாதிபதி பிரான்ஸ் நாட்டுக்கு சென்றிருந்தார். அங்கு புலம் பெயர் மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்த சந்திப்பு தொடர்பில் காணொலி ஒன்று வெளியாகியுள்ளது.

அந்தக் காணொலியில்,

புலம்பெயர் தமிழர் ஒருவர், ஏனைய விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு முன்னர் இலங்கையின் மனிதாபிமான பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும். இலங்கையில் அரசாங்கம் ஜனநாயகமானது என்று நான் நம்பவில்லை எனவும் ஆங்கிலத்தில் தடுமாறியபடி கூறினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, "அவர் என்ன கூற முயற்சிக்கின்றார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆங்கிலம் தெரியாவிட்டால் தமிழில் பேசுங்கள். எனக்கு தமிழ் தெரியும்", என்றும் கூறினார்.

இதைத் தொடர்ந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் புலம்பெயர் தமிழர் 2009ஆம் ஆண்டு இனப்படுகொலை குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஜனாதிபதி பதிலளிக்காமல் "இலங்கைக்கு வாங்க", என்று மட்டுமே கூறினார். (ஐ)

## ஈழத்தமிழ்...

தனக்கே உரித்தான நளினபாணியில் சமூகவலைத்தளத்தில் பதிவு அப்படியே வருமாறு,

யுனெஸ்கோ 'மகாவம்சம்' நூலையும் பல்வேறு 'உலக பாரம்பரிய ஆவண'ங்களில் ஒன்றாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இதில் ஒரு 'விக்கல்' என்னவென்றால், இந்நூல் இலங்கையில் ஓர் 'அரசியல் வரலாற்று' நூலாக கருதப்படுகிறது.

இந்த அங்கீகாரம், நிச்சயமாக பெருந் தேசியவாதிகளை பலப்படுத்தப்போகிறது.

இது ஐ. நா. அல்லது யுனெஸ்கோ நிறுவனங்களுக்கு தெரியாது என்பதில்லை.

யோசித்துப் பார்த்தால், ஈழத்தமிழ் அரசியல் இவை தொடர்பில் ஐ. நா. நிறுவனங்களின்மீது செல்வாக்கு செலுத்தவில்லை என்பது தெரிகிறது.

மகாவம்சத்துக்கு சமானமாக ஈழத் தமிழ் வரலாற்று நூல்கள் எதுவும் இருக்கின்றனவா? இருந்தால், அவை யுனெஸ்கோ அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கப்பட்டனவா? என எனக்கு தெரியவில்லை.

இவற்றை ஏதாவது ஒன்றிணைக்கப்பட்ட தமிழ் பணிமனை செய்கிறதா என்றும் தெரியவில்லை.

எனினும் ஒரேயொரு ஆறுதல், (அஸ்வெசும!)...

மகாவம்ச கதை மூலமாக, கி. மு. 543இல் கலிங்கத்திலிருந்து விஜய இளவரசன் வந்து இலங்கை தீவில் கரை இறங்கினான் என்றும்,

வந்தவன் ஆதிராணி குவேனியை மணந்தான்,

பின் பாண்டிய தமிழ்நாட்டு இளவரசியையும் மணந்தான், அவனின் 700 தோழர்களும் பாண்டிய கன்னியரை மணந்தார்கள், சிங்கள இனம் உருவானது என்றெல்லாம் கூறப்படுவது.

என்னை தேடி வந்த ஞானசாரர், 'விஜயன் என்று எவரும் வரவில்லை. அது பொய்.' என்றார். நான் இந்த மகா வம்சத்தை சுட்டிக்காட்டி பேசியதும், மூடிக் கொண்டு போய் விட்டார் - என்று கூறியுள்ளார். (ஐ)

# சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கு அரசாங்கம் நீதி கிடைக்க செய்ய வேண்டும்!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 28

இலங்கை அரசு கொண்டிருக்கும் சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு அமைவாக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும், அவர்கள் முகங்கொடுத்த அநீதியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு அவசியமான புனர்வாழ்வளித்தல் செயன்முறை உரியவாறு பூர்த்திசெய்யப்படுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

சித்திரவதைகளிலிருந்து விலக்கீடு பெறுதல் என்பது எந்தவொரு சூழ்நிலையிலும் மட்டுப்படுத்தப்பட முடியாத மனித உரிமையாகும். இருப்பினும் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் உளவியல் மற்றும் உடலியல் ரீதியான சித்திரவதைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன.

இந்த மிகமோசமான மனித உரிமை மீறலின் பாரதூரமான பின்விளைவுகளை சித்திரவதைக்கு உள்ளான தரப்பினர் மாத்திரமன்றி, அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நேரில் பார்த்த சாட்சியங்களும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

எனவே சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தில் (நேற்று முன்தினம்) மேற்குறிப்பிட்டவாறு பாதிக்கப்பட்ட தரப்பினர், அவர்களது குடும்பத்தினர் மற்றும் சாட்சியங்களுக்கு அவசியமான ஆதரவு அனைத்து வழிகளிலும் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென மீளவலியுறுத்துகின்றோம்.

நாம் எமது விசாரணை செயன்முறையின் ஊடாக எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நியாயத்தையும், இழப்பீட்டையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுக்கு அப்பால், அவர்கள் முழுமையாக மீள்வதற்கு அவசியமான உளவியல் ஆலோசனை வழங்கல் மற்றும் புனர்வாழ்வளித்தல் என்பன அவசியமாகின்றன.

இதேவேளை ஒடுக்குமுறைகள் தொடர்பான அச்சம் மற்றும் கடந்த காலங்களில் பதிவாகியுள்ள தண்டனைகளிலிருந்து விலக்கீடு பெறும் போக்கு என்பவற்றின் காரணமாக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களும், சாட்சியங்களும் அநேக சந்தர்ப்பங்களில் நீதிக்கட்டமைப்பை அணுகுவதிலிருந்து விலகியிருக்கின்றனர்.

எனவே இலங்கை அரசு கொண்டிருக்கும் சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைவாக எவ்வித ஒடுக்குமுறைகளுமின்றி பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும், அவர்கள் முகங்கொடுத்த அநீதியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு அவசியமான புனர்வாழ்வளித்தல் செயன்முறை உரியவாறு பூர்த்தி செய்யப்படுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

## சனி,ஞாயிறு...

நிலையியல் கட்டளைக்கு அமைய சபாநாயகர் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றத்தை கூட்டவுள்ளார்.

முன்னதாக உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு ஒப்புதல் பெறுவதற்காக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாராளுமன்றம் கூட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்நாட்டு...

கட்டடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டிலுள்ள 5 கோடிக்கும் பேற்பட்ட மேற்பட்ட வங்கி வைப்பீட்டாளர்களின் எந்தவொரு வைப்புகளுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படாது. வங்கி வைப்புகளுக்காக செலுத்தப்படும் வட்டிக்கும் பாதிப்பு ஏற்படாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு யோசனைகளை இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமரின் வேண்டுகோளுக்கு அமைய, எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்றத்தை கூட்டுவதாக அறிவித்து சபாநாயகர் நேற்று அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உலக...

இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க 50 கோடி டொலர் கடனுத வியை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்தது.

இரு கட்டங்களாக வழங்கப்படவுள்ள இந்த கடனுதவியில் முதல்கட்டமாக 37.12 கோடி டொலர் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. இந்தக் கடனை பெற்றுக் கொள்வதற்கான சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி இலங்கை மத்திய வங்கியின் இணக்கப்பாடும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த கடனுதவியை பெற்றுக் கொள்வதற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் ஒப்பந்தத்தில் கைசாத்திடுவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## மகாபொல...

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் நன்கொடைக்காக பணம் விநியோகிக் கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் தலைமீட்டின் மூலம் அரசாங்கத்தால் 31 கோடி ரூபாய் பணம் மகாபொல புலமைப் பரிசில் நிதியத்தில் இருந்து அவ்வாறே மகாபொல புலமைப்பரிசில் நன்கொடைக்காக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பணம் மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களுக்குமான புலமைப்பரிசில் நிதியாக மாணவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு இந்த வாரத்துக்குள் வைப்பிலிடப்படும்.

## ஆளும்...

கடன் மறுசீரமைப்பு சட்ட மூலம் தொடர்பில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் அனைத்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களையும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்...

ரயில்கள் பயணிக்க முடியும் என்று துறைசார் அமைச்சர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், புகையிரதப் பாதை திருத்தப்பணிகள் நிறைவுக்கட்டத்தை எட்டுகின்றன. இதனால், ஜூலை 15ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் வரையிலான சேவையை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக புகையிரதத் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் சமன் பொல்வத்தகே தெரிவித்தார். (ஐ)

## வெளியானது...

மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார மீட்சி தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம் தொடர்பில் சமூகத்தில் சில தரப்பினர் மேற்கொள்ளும் தவறான பிரசாரங்களால் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது. பகிரங்கப்படுத்தப்பட்ட பட்டியல் இறுதி பட்டியல் அல்ல - என்றும் கூறினார்.

மேலும், கடந்த காலத்தில் நாடு, பெரும் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தது. இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்பதில் முக்கிய அங்கமாக வறிய மக்களை பாதுகாக்கும் நோக்கில் 'அஸ்வெசும' சமூக நலன்புரி நன்மைகள் திட்டம் தொடங்கப்பட்டது. பொதுவாக, நம் நாட்டில் சமூக நலத் திட்டத்தில் சேர்க்கப்படும் நபர்கள் பலப்படுத்தப்பட்டு , பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, ஆயுட்காலம் முழுவதும் அந்தப் பலன்களை சார்ந்து செயல்படும் முறையே எப்போதும் இருந்து வருகிறது. ஆனால், இந்தத் திட்டம் அதற்கு மாற்றமான ஒரு திட்டம் என்றே சொல்ல வேண்டும்.

2001ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலப் பலன்கள் சட்டத்தின் படி, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 6 துறைகளின் பிரகாரம் குறிகாட்டிகளின் கீழ் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதன்படி, தகுதியான பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது இறுதிப் பட்டியல் அல்ல என்பதை வலியுறுத்த வேண்டும்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் பெயர் உள்ளடங்காத நபரோ அல்லது குடும்பத்தாரோ இருப்பின் மேன்முறையீட்டு காலத்திற்குள் தங்களின் மேன்முறையீடுகளை பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அதில் தகுதியற்றவர்களின் பெயர் இடம் பெற்றிருந்தால், அது குறித்தும் ஆராயப்படும்.

பல்வேறு பிரசாரங்கள் அல்லது தனிப்பட்ட அழுத்தங்கள் காரணமாக மக்கள் பீதியடைய வேண்டாம் என் றும், சில அரசியல் குழுக்களின் தேவைக்காக போராட்டங்களில் ஈடு பட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறோம். மேலும், அரசினால் அறிவிக்கப்பட்ட முறைக்கு ஏற்ப அனைவரும் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், மேல்முறையீட்டு காலம் முடிவடைந்த பிறகு அஸ்வெசும சமூக நலப் பயனாளிகளின் இறுதிப் பட்டியலைத் தயாரிக்க எதிர்பார்க்கிறோம். எவருக்கும் அநீதி ஏற்பட இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதவிர, சிறுநீரக உதவித்தொகை, ஊனமுற்றோர் உதவித்தொகை மற்றும் முதியோர் உதவித்தொகை பெறும் பயனாளிகளின் பட்டியலையும் விரைவில் வெளியிட எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## நலன்புரித் திட்டங்கள் குறித்து ஜனாதிபதியுடன் நேரடி பேச்சு

கொழும்பு, ஜூன் 28

நலன்புரித்திட்டங்கள் தொடர்பான முரண்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இதனை குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

"பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கு அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பயனாளர்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது மிகவும் சிக்கலான விடயமாகும்.

எவ்வாறிருப்பினும் தற்போது மேன்முறையீட்டுக்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. கட்சி என்ற ரீதியில் நாம் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றோம்.

கொவிட் காலத்தில் இவ்வாறான கொடுப்பனவுகள் வழங்கும் வேலைத்திட்டத்தின் போது குடும்பங்கள் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. மாறாக வீடுகளை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

அஸ்வெசும குறுகிய கால வேலைத்திட்டமாகும். எனவே அதற்கு அப்பால் சென்று மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

நியாயமற்ற முறையில் எவருக்கேனும் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தால் , அது தொடர்பில் ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் அறிவிப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

அதே போன்று சமூர்த்தி பயனாளிகளுக்கு அந்த கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தால் அது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் தயாராகவுள்ளோம்" - என்றார். (அ)

## அரச அலுவலர்கள் சமூகத்துக்கு எதையாவது செய்தாகவேண்டும்

### வலியுறுத்துகிறார் யாழ்.அரச அதிபர்



யாழ்ப்பாணம், ஜூன் 28

அரச சேவையில் இணைந்துள்ள அரச உத்தியோகத்தர்கள் எதையாவது இந்த சமூகத்துக்கு செய்யவேண்டும் என்ற மனப்பாங்கோடு இருக்கவேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண தாதியர் பயிற்சி கல்லூரியில் நேற்று இடம்பெற்ற குருதிக்கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச சேவையில் இணைந்துள்ள அரச உத்தியோகத்தர்கள் இந்த சமூகத்துக்கு ஏதாவது செய்யவேண்டும். அந்த மனப்பாங்கு குருதிக்கொடை வழங்குவதிலும் காணப்படவேண்டும்.

ஏற்கனவே நான் கடமையாற்றிய திணைக்களங்கள் மற்றும் காரியாலயங்களில் அந்தந்த நலன்புரி அமைப்புகளில் ஊடாக இரத்த தான முகாம்களை கட்டாயமாக செய்யவேண்டும் என அறிவுறுத்தி அந்த நடவடிக்கைக்கு அவர்களை உள்வாங்கும் செயற்பாட்டை மேற்கொண்டிருந்தேன். தற்பொழுது நான் அரசாங்க அதிபராக பதவி ஏற்ற பின் சகல பிரதேச செயலக பிரிவுகளுக்கும் அந்தந்த பிரிவுகளில் இரத்ததான முகாம்களை நடத்தி இரத்ததான முகாம்களை செயற்படுத்தவேண்டும் என்று கோரி இருக்கின்றேன்.

அண்மையிலும் சில பிரதேச செயலகங்களில் இரத்ததான முகாம்கள் இடம் பெற்றிருந்தமை நீங்கள் அறிந்த விடயம்.

இந்த இரத்ததான பணி தொடர்ந்து கொள்ளப்படவேண்டும் இதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் என்ற வகையில் எங்களுடைய அலுவலகங்கள் தொடர்ச்சியாக தங்கள்பங்களிப்பை வழங்குவார்கள்-என்றார். (அ)

# குருதிக்கொடை குறித்த விழிப்புணர்வு வடபகுதி மக்களிடம் மிகவும் குறைவு!

### மாகாண ஆளுநர் கவலை



யாழ்ப்பாணம், ஜூன் 28

வடபகுதியில் உள்ள மக்களிடம் இரத்த தானம் தொடர்பிலான விழிப்புணர்வு குறைவாக காணப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண தாதிய பயிற்சி கல்லூரியில் நேற்று குருதிக்கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தானங்களில் சிறந்த தானம் இரத்த தானம். உடல் பாகங்களை தானம் செய்வது, கண் தானம் செய்வது போன்ற பல்வேறு தானங்கள் தற்பொழுது நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இரத்த தானம் வழங்குவதில் தற்பொழுது முழுமையாக நாங்கள் வளர்ச்சி பெறாவிட்டாலும் முன்னேற்றமாக உள்ளது என்பது பலராலும் உணரப்பட்ட ஒரு விடயமாக காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் அதை முன்வந்து தானம் செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வு எங்களைப் பொறுத்த வரை குறைவாக இருப்பது எல்லா இடங்களிலும் சுட்டிக்காட்டப்படுகின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது. இப்பொழுது பலர் அதற்கு ஆக்கமும் ஊக்கமளித்து தாங்களாக முன்வந்து இரத்த தானத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வாறு செயற்படும் நபர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். வடக்கு மாகாணத்தில் யுத்த காலத்தில் பல்வேறுபட்ட பிரச்னைகளை நாங்கள் எதிர்நோக்கி இருந்தோம். யுத்த காலத்தில் இரத்தம் என்பது உயிர் காக்கும் ஒரு விடயமாக காணப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் நான் அரசாங்க அதிபராக இருந்தபோது யுத்தம் மற்றும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்த தானம் வழங்குவதில் நாங்கள் இடர்பாடுகளை எதிர்நோக்கி இருந்தோம்.

அந்த காலத்தில் இரத்ததான விழிப்புணர்வை பல்வேறுபட்ட மட்டங்களில் மேற்கொண்டு இரத்த வங்கி மூலம் செயற்படுத்தி தான் பல உயிர்களைக் காப்பாற்றி இருந்தோம்.

எனவே இரத்த தானம் என்பது ஒரு முக்கியமான விடயமாக காணப்படுகின்றது.

மருத்துவர்கள் தமது சேவையை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமாக இருந்தால் எங்களைப் போன்றவர்கள் வைத்தியர்களுக்கு உதவுவதற்கு முன்வரவேண்டும்

சமூகப் பொறுப்பை நாங்களாகவே உணர்ந்து செயற்பட்ட இரத்த கொடையாளர்கள் இன்றைய தினம் கௌரவிக்கப்படுகின்றார்கள். எனவே இதேபோல் பல குருதிக்கொடையாளர்கள் எதிர்வரும் காலத்தில் உருவாகவேண்டும்.

அதேபோல மாகாண சபை ஆளுகைக்குட்பட்ட உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்களிடையே இரத்த தான உணர்வினை ஏற்படுத்த முனையவேண்டும் - என்றார். (அ)

### 500 மில்லியன் டொலர்:

## இலங்கை - உலக வங்கி இடையில் ஒப்பந்தம்!

கொழும்பு, ஜூன் 28

வரவு-செலவுத் திட்டத்துக்கு தேவையான நிதியை வழங்குவதற்கு இலங்கைக்கும் உலக வங்கிக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட உள்ளது.

அந்த உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கு உலக வங்கியிடமிருந்து 500 மில்லியன் டொலர்கள் கிடைக்கும்.

உரிய நிதியைப் பெறுவதற்கு அமைச்சரவையின் அனுமதி தேவை.

கடந்த மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்குவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட 2.9 மில்லியன் டொலர் கடன் வசதியின் பின்னர் நாடு பெற்றுள்ள மிகப் பெரிய நிதி உதவி இதுவாகும்.

இலங்கைக்கு 700 மில்லியன் டொலர் கடனுதவி வழங்க உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளதாக கடந்த வாரம் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, எஞ்சிய 200 மில்லியன் டொலர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## கட்சி தலைவர்கள் கூட்டம் வெள்ளிவரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 28

பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் நேற்று நடைபெறவிருந்த பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகரின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெறவுள்ளதாக பாராளுமன்றத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான பிரேரணைகளுக்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெறும் நோக்கில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பாராளுமன்றச் சபை நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் இதன்போது தீர்மானம் எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்த கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுடுப்பத்துவதற்காகவே இந்த கூட்டம் என ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## குருதிக்கொடையாளிகளுக்கு யாழ்ப்பாணத்தில் கௌரவம்




யாழ்ப்பாணம், ஜூன் 28

குருதிக் கொடையாளிகளையும் குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களையும் கௌரவிக்கும் விசேட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

100 குருதிக் கொடையாளர்களுக்கும் குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்தும் 50 பேரும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிராந்திய இரத்த வங்கி ஏற்பாட்டில் இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் தாதியியல் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலை அதிகாரிகள், இரத்த வங்கி உத்தியோகத்தர்கள்,

தேசிய குருதிமாற்று பிரயோக சேவையினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு குருதிக் கொடையாளருக்கு கௌரவம் வழங்கினர். (அ)

## அமைச்சுப் பதவி எமக்கு வேண்டாம்!

### நாமல் மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாம் அமைச்சுப் பதவிகளைக் கேட்கவில்லை. அந்த அமைச்சுக்களை ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுக்கு வழங்கி அரசைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம்."

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

எமக்கு அமைச்சுக்கள் வேண்டாம் என்று நாம் எப்போதோ கூறிவிட்டோம். மொட்டுக் கட்சியினர் அமைச்சரவையில் இருப்பதால்தான் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து யாரும் வருவதில்லை என்று கூறுகின்றார்கள். எமது அமைச்சுப் பதவிகளை அவர்களுக்குக் கொடுத்து அரசைப் பலப்படுத்துங்கள் என்று நாம் அப்போதே சொல்லிவிட்டோம். நாங்கள் அதற்கு ஆதரவு வழங்குகின்றோம் என்றும் கூறிவிட்டோம்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 10 பேர் வருகின்றார்கள், 20 பேர் வருகின்றார்கள், 40 பேர் வருகின்றார்கள் என்று ஒரு வருடமாகச் சொல்கிறார்கள் சொல்கின்றார்கள். ஆனால், எதுவும் நடக்கவில்லை-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.